

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 122 குரோதி வருடம், கார்த்திகை மாதம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (10.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ.ஆகிர் -08, 0115 886187 - பக்கங்கள் 12 விலை ரூ.40







## அரசியல் அடிப்படையில் பெர்மிட்கள் வழங்கவில்லை



### சொல்கிறார் ரணில்

தனது அரசாங்கத்தின் காலப்பகுதியில் வழங்கப்பட்ட எந்தவொரு மதுபானசாலை அனுமதிப்பத்திரமும் அரசியல் நன்றியுணர்வுக்காக வழங்கப்படவில்லை என்றும் வங்குரோத்து நிலையிலிருந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக... » 02 பக்கம்

## மின்சார சபை பணியாளர்களுக்கு இம்முறையும் போனஸ் இல்லை

### பணிப்பாளர் சபையில் தீர்மானம்


மின்சார சபை பணியாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொடுக்குமாறு மின்சார சபை தொழிற்சங்கங்கள் கோரியுள்ளபோதிலும், தற்போதைய சூழ்நிலையில் மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொடுக்காமலிருக்க மின்சார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

இந்த வருடத்தில் மின்சார சபை பெரும் இலாபத்தை பெற்றுக்கொண்டிருந்தாலும் அந்த நிதியை கடன் மீள் செலுத்துகை மற்றும் மின்கட்டணத்தை குறைப்பதற்காக ஒதுக்கீடுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பணிப்பாளர் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மின்சார சபை இலாபமடையும் நிலையை அடைந்துள்ள நிலையில், இன்று 10ஆம் திகதிக்கு முன்னர் மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மின்சார...

» 02பக்கம்

## இந்தியக் கப்பல் அரிசியுடன் கொழும்புக்கு



இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்ட 10,000 மெற்றிக் தொன் அரிசி அடங்கிய கப்பல் கொழும்பு துறைமுகத்தை அண்மித்துள்ளதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக இந்தியாவிலிருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைத் தற்காலிகமாக இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், அரிசி இறக்குமதிக்கான வரையறைகளையும் தற்காலிகமாக நீக்கியுள்ளது.

இதற்கமைய, சிறிய துறைமுகங்களிலிருந்து பல இறக்குமதியாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட 10,000 மெற்றிக் தொன் அரிசி நாளைமறுதினம் 12ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் இலங்கையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உணவுகளின் விலை உயரும்!

### 25 - 30 வீதம்வரை என்கிறது அகில இலங்கை உணவக மற்றும் வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

நா.தினுஷா

உணவு தயாரிப்புக்கு தேவையான அரிசி, தேங்காய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், அடுத்தவாரம் முதல் உணவகங்களில் விற்பனையாகும் உணவுப் பொருட்களின் விலையும் அதிகரிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரிசி மற்றும் தேங்காய் விலை எதிர்வரும் ஒரு வாரத்துக்கு இவ்வாறே அதிகரித்து காணப்படுமாக இருந்தால் சோற்றுப்பொதி, சிற்றுண்டிகள் போன்ற உணவுப் பொருட்களின் விலை 25 - 30 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை உணவக மற்றும் வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷண ருக்ஷான் தெரிவித்தார்.

வழமைபோல் இடியப்பத்துக்கு தேங்காய்ச்சம்பல், தேங்காய்ப்பால் சொதி, தேங்காய்ப்பால் கறி உணவுகளுக்கு ஏன் வழங்குவதில்லை என்று நுகர்வோர் வினவுகிறார்கள். 70 - 80 ரூபாவாக இருந்த தேங்காய் இன்று 180 – 220 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது. இருந்தபோதும் எங்களால் முடிந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எங்களின் சேவையை வழங்கி வந்தோம். » 02 பக்கம்



## தேங்காய்ப்பால் உணவுகளுக்கு தட்டுப்பாடு

கே.சுபானி

தேங்காய் விலை அதிகரிப்பால் ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் தேங்காய்ச் சம்பல் மற்றும் பாற்சொதி விநியோகம் 90 சதவீதம்... » 02 பக்கம்

## ரணிலின் தனித் தீர்மானங்களால் மக்களின் வரிப்பணம் பகற்கொள்ளை



### டலஸ் அழகப்பெரும கடும் குற்றச்சாட்டு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழு 72 கோடி ரூபா செலவு செய்துள்ள நிலையில், தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்துவிட்டு அதனை இரத்துச் செய்ததால் வேட்புமனுத் தாக்கல் செய்த அநேகமானவர்கள் பாதிப்படைந்துள்ளனர். எனவே, பாதிப்படைந்தவர்களுக்கான நிவாரணத்துக்காக 22 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதுடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், கடந்த அரசாங்கத்தின் பகற்கொள்ளைக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் - என்று தெரிவித்து சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு... » 02 பக்கம்



## அரிசி இறக்குமதி 16ஆம் திகதிக்கு முன்

### அரச வர்த்தக கூட்டுத்தாபனம் அறிவிப்பு

நாட்டில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக 70,000 மெற்றிக் தொன் நாட்டரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், அதில் முதல் கட்டமாக 5,200 மெற்றிக் தொன் நாட்டரிசி எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை வந்தடையும் என்று இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவீந்ர பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரிசி இறக்குமதி மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தேசிய அரிசி ஆலை உரிமையாளர்கள்... » 02 பக்கம்



## உஷ்

ஜனாதிபதி அநுரகுமார இந்தியாவுக்கான பயணத்தின்போது, அதானியின் மன்னார் காற்றாலை மின் திட்டத்தை இறுதி செய்யவேண்டும் என்பதில் உறுதியாக நிற்கிறதாம் புதுடில்லி.

அந்தத் திட்டம் தொடர்பில் பல வியாக்கியானங்களை வகுத்துக்கொண்டு விளக்கமளிக்க ஜனாதிபதி தரப்பு தயாராக இருந்தாலும் அதனை கேட்கும் நிலையில் பாரதம் இல்லையென உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

## இலங்கையை இலஞ்ச ஊழலற்ற நாடாக்க ஒன்றுபடுவோம்



### ஜனாதிபதி அநுர மக்களுக்கு அழைப்பு

''எத்தனை சட்டங்கள் இயற்றினாலும் எத்தனை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டாலும் அவற்றை வழிநடத்துபவர்கள் சரியாகச் செயற்படாவிட்டால், மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படாது'' என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு நீதி வழங்கப்படாவிட்டால், அந்த அதிகாரம் பயனற்றதாகிவிடும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை (09) நடைபெற்ற 2024 சர்வதேச ஊழல் எதிர்ப்பு தின தேசிய நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க... » 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



இப்படியெல்லாம் பிரச்சினைகள் புதுசு புதுசா வருமென்று தெரிந்திருந்தா இவங்க ஆட்சியை எடுத்திருக்கவே மாட்டாங்கள் என்னஙகோ?

## ரணிலின்...

கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும், ஏற்கெனவே கோரப்பட்ட வேட்பு மனுக்களை நிராகரித்துவிட்டு புதிய வேட்புமனுக்களினூடாக விரைவாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு அமைச்சரவைத் தீர்மானித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தனது அரசியலின் பூச்சியத் தன்மையை மூடி மறைக்கும் நோக்கில், 2023 ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் தேர்தலை இரத்துச் செய்வதற்கு தன்னிச்சையாக எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தற்போது வரையில் செலவு செய்யப்பட்டுள்ள 72 கோடி ரூபா (72,000,000) இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவை சுட்டிக்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அப்போதைய நிலைமையில் 08 பில்லியன் (8,000,000,000) ரூபா செலவாகும் என கணிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, எந்தவொரு சாதாரண காரணமும் இல்லாமல் மொத்த நிதியில் 10 சதவீதம் வீணாக செலவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. மேலும், இந்த நிதி ஆட்சியாளர்கள் அவர்களின் தோட்ட வருமானத்திலோ அல்லது அவர்களின் வங்கி கணக்குகளில் இருந்தோ ஒதுக்கியதல்ல. மக்களின் வரிப் பணத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டதாகும் என்பது தெளிவான விடயமாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் தீர்மானத்திலிருந்த ஆணைக்குழு உறுப்பினர்களை திசைத்திருப்பி, தேர்தலை நடத்துமாறு உத்தரவிட்ட உயர் நீதிமன்றத்தையும் மதிக்காமல், திறைசேரியில் பணம் இல்லை எனக் கூறி, தேர்தலுக்கு வேட்புமனு கோரவில்லை என்று பாராளுமன்றத்தில் அநாகரிகமான முறையில் கருத்து முன்வைக்குமளவுக்கு அரசத் தலைவர் தனது அரசியலை கீழ்த்தனமாக பயன்படுத்த முயற்சித்தமை நகைப்புக்குரியதாகும்.

ஜனநாயக ரீதியான எந்தவொரு சாதாரண காரணமும் இன்றி இவ்வாறு தேர்தலை காலந்தாழ்த்தியமை கூட்டு ஊழலுக்கு உள்ளாக்கிய இந்த அரசியல் செயற்பாடு பகற்கொள்ளையாகும். திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 72 கோடி ரூபாவுக்கு மேலதிகமாக, வேட்புமனுத்தாக்கல் செய்வதற்காக வெவ்வேறு அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்து 80,676 வேட்பாளர்களால் தேர்தலுக்காக செலவுசெய்யப்பட்ட நிதி எவ்வளவு என்பதை கணப்பிடுவது கடினம்.

இதுமட்டுமல்லாமல், இவர்கள் 18 கோடி ரூபாவை கட்டுப்பணமாக செலுத்தியிருக்கிறார்கள். அதன் காரணமாக சூறையாடப்பட்ட இந்த 72 கோடி ரூபா மக்களின் பணத்தை நிர்வாகிகளிடமிருந்து அறவிடுமாறு கோரி பொதுமக்கள் என்ற அடிப்படையில் நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். இந்த பொருளாதார கொலையாளிகள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் எவ்வாறான தீர்மானம் எடுக்கப்போகிறது என்பதை எதிர்பார்த்துள்ளோம். அத்துடன் புதிய தேர்தலுக்கான திகதி அறிவிப்புடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு 22 மில்லியன் ரூபா நிவாரணத்தை வழங்குவதாக வரி செலுத்தும் மக்களுக்கு அறிவிக்க வேண்டும்'' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## மின்சார சபை...

சபையின் சேவை சங்கம் மின்சார சபை தலைவரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தது.

அந்த தொழிற்சங்கத்தின் பிரதான செயலாளர் ரஞ்சித் ஜயலால் இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

மின்சார சபை ஊழியர்களுக்கு கடந்த இரு வருடங்களாக மேலதிக கொடுப்பனவு கிடைக்கவில்லை. இருந்தபோதும் தற்போது எங்களின் தொழிற்சங்கம் பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கம் ஆட்சியமைத்துள்ளது. அதன் காரணமாக ஊழியர்களுக்கு கட்டாயம் மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இருந்தபோதும், தேசிய மக்கள் சக்தியுடன் தொடர்புடைய மின்சார சேவை சங்கம் மின்சார சபை பணியாளர்களுக்கு அவ்வாறு மேலதிக கொடுப்பனவை கோரியிருந்தபோதிலும், அந்தக் கொடுப்பனவை பெற்றுக்கொடுக்காமலிருக்க மின்சார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, மின்சார சபை பணிப்பாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொடுக்காமல் இருப்பது தொடர்பில் மின்சார சபையின் பணிப்பாளர் சபை இறுதித் தீர்மானம் எடுத்துள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மின்சார சபைக்கு இந்த வருடத்தில் பெரும் வருமானம் கிடைத்துள்ளபோதிலும், அதில் 112 பில்லியன் ரூபாவை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. அவ்வாறே, 2024ஆம் ஆண்டு மின்சார சபைக்கு கிடைத்த இலாபத்தில் மீதமாகியுள்ள 41 பில்லியன் ரூபாவை மின்கட்டணத்தை குறைப்பதற்காக ஒதுக்கீடு செய்துவது தொடர்பில் மின்சார சபையின் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தியுள்ளது.

## தேங்காய்ப்பால்...

நிறுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷண ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

மேலும் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பால் ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் உணவுப் பொருட்களின் விலைகளும் 30 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரிசி, தேங்காய், முட்டை, வெங்காயம் மற்றும் கோழி இறைச்சி உள்ளிட்ட பொருட்களின் விலை அதிரித்துள்ளது. கடந்த வாரம் 1,200 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை நேற்று 1,280 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதேபோன்று தேங்காய்ப்பாலால் தயாரிக்கப்படும் அப்பம் உற்பத்தி 60 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் வீடுகளில் தயாரிக்கப்படும் உணவுப் பொதிகளின் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையை கருத்திற்கொண்டு ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களுக்கான விசேட வலையமைப்பொன்றை உருவாக்கித் தருமாறு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறின்றேல், ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் முற்றாக முடங்கும் அபாயம் ஏற்படுமென சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

நாடுமுழுவதும் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ச் சங்க அறிவோர் ஒன்றுகூடலில் தமிழர் அரசியல் நிலை குறித்து உரை

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் "பாராளுமன்றத் தேர்தலுக்கு பிறகு தமிழர்களின் அரசியல் நிலை" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திரன் திருவரங்கனும் "பெண்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்" என்ற தலைப்பில் சட்டத்தரணியும் சமூக, அரசியல் செயற்பாட்டாளருமான சுவஸ்திகா அருலிங்கமும் உரையாற்றுகிறார்கள்.

விநோதன் மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தலைமை தாங்குகிறார்.

## இலங்கையை...

இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''இந்த ஆண்டுக்கான சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் 'தூய்மையான எதிர்காலத்துக்காக இளைஞர்களை ஒன்றிணைப்போம்' என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படுகிறது. இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு போதுமான சட்டங்களும் நிறுவனங்களும் இருந்தபோதும் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை தமது மனச்சாட்சியிடம் கேட்க வேண்டும். ஊழல் மற்றும் இலஞ்சம் என்பன சமூக அவலமாக மாறியுள்ளது.

2013 சர்வதேச சுட்டெண்ணில் 79ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2023ஆம் ஆண்டளவில் 115ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. எனவே சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் ஏன் கொண்டாடப்படுகிறது. வருடா வருடம் ஊழல் மோசடிகள் அதிகரித்து வருவதாகவும் அடுத்த வருடம் அதனை குறைக்க முடியாவிட்டால் சர்வதேச தினக் கொண்டாட்டங்களை நடத்துவதில் எவ்விதப் பயனும் இல்லை. 2021ஆம் ஆண்டில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 69 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளதுடன் 40 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. 2022 இல் 89 வழக்குகளைத் தாக்கல் செய்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 45 வழக்குகளை வாபஸ் பெற்றுள்ளது.

இந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டமைக்கான காரணத்தை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் விசாரணை அதிகாரிகள் வழக்குகளில் சாட்சிகளாகாதது ஏன் என்பதற்கான காரணங்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஒரு வருடத்தில் இரண்டு கான்ஸ்டபிள்கள், ஒரு கிராம சேவகர் மற்றும் ஒரு எழுதுவினைஞர் ஆகியோர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் சட்டம் சிலந்தி வலையைப் போன்று செயற்படுவதாக மக்கள் கருதுகின்றனர். மேலும் அந்த வலையில் சிறிய விலங்குகள் சிக்குகின்றன. பெரிய விலங்குகள் சிலந்தி வலையை சேதமாக்கி தப்பிச் செல்கின்றன. எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரச கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறு செய்யாமல் ஆரோக்கியமான நாடொன்றை உருவாக்க முடியாது. சட்டத்தை அமுல்படுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நீதியை நிலைநாட்டுவதைத் தாமதப்படுத்துவதும் நீதியை நிலைநாட்டுவதாக அமையாது.

எனவே, குறைந்த இலஞ்சம் பெறும் நாடாக இலங்கையை மாற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இதன்மூலம் பிரஜைகளின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பை வழங்க முடியும்'' என்றார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பிரதமரின் செயலாளர் ஜீ.பி.சபுதந்திரி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி.இத்தவெல, மேல் நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## உணவுகளின்...

இருந்தபோதும், தற்போதுள்ள நிலைமைகள் மற்றும் தேங்காய் விலைக்கமைய தேங்காய்ச்சம்பல், தேங்காய்ப்பால் சொதி போன்றவற்றை தயாரிக்க முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் நேற்று திங்கட்கிழமை(09) கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

அதற்கு காரணம் தேங்காய்க்கான கேள்வி மற்றும் விலை என்பன சடுதியாக உயர்வடைந்துள்ளமையே. இதற்காக நுகர்வோரிடம் மன்னிப்புக் கோருகிறோம். விலைக் கட்டுப்பாட்டுக்கு வந்ததன் பின்னர் அவற்றை முறையாக பெற்றுக்கொடுப்போம். அரிசி இறக்குமதி செய்வதாகவும் அரச தென்னை தோட்டங்களினூடாக தேங்காய் என்பவற்றை நிவாரணத் தொகையில் பெற்றுக்கொடுப்போம் என்றும் வர்த்தக அமைச்சர் கூறியிருக்கிறார். எனவே, இந்த ஒருவாரம் பொறுமையாக பார்க்க வேண்டும். அரசாங்கத்தையும் நெருக்கடிக்குள்ளாக்க நாங்கள் தயாரில்லை. நுகர்வோரை நெருக்கடிக்குள்ளாக்கவும் எங்களுக்கு விருப்பம் இல்லை. எனவே இந்த விடயங்களை மீளாய்வு செய்ததன் பின்னர், இந்த வாரம் நிலைமையை பரிசீலித்துவிட்டு அடுத்த வாரம் உணவுப் பொருட்களின் விலைகளை நிச்சயமாக அதிகரிக்க நேரிடும். இதனூடாக விலை அதிகரிப்பு தொடர்பில் முன்னறிவிப்பை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கிறோம்.

பொருட்கள் தட்டுப்பாடு நிலவும் சந்தர்ப்பத்தில் எவ்வளவு நிர்ணய விலை விதித்தாலும் மாபியா முடிவுக்கு கொண்டுவரப்படாது. எதிர்வரும் நான்கு மாதங்களுக்குத் தேவையான அரிசி பாரியளவில் அரிசி ஆலை உரிமையாளர்களிடம் இருக்கிறது. எனவே, இவர்கள் மாபியாவே செய்கிறார்கள். அப்பாவி மக்களின் பசியை பணயமாக வைத்து இந்த மாபியாவை செய்து வருகிறார்கள்.

அரிசி, தேங்காய் விலை அதிகரிக்கும் பட்சத்தில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்க நேரிடும். 220 ரூபா அரிசியை 270 - 280 ரூபாவுக்கு கொள்வனவு செய்கிறோம் என்றால், 70 ரூபாவுக்கு இருந்த தேங்காயை 200 ரூபாவுக்கு கொள்வனவு செய்கிறோம் என்றால் அந்த செலவை நிவர்த்தி செய்தே ஆகவேண்டும். இதற்காக எங்களின் தொழிற்றுறையை கைவிட முடியாது. எங்களுக்கு அரச சம்பளமோ சமூர்த்தியோ கிடைப்பதில்லை. நாங்கள் அரசாங்கத்துக்கு வரி செலுத்தும் தரப்பினர். அசாதாரண முறையில் விலை அதிகரிப்பை மேற்கொள்ள நாங்கள் தயாராக இல்லை. இந்த விலை அதிகரிப்பு இன்னும் இரு வாரங்களுக்கு நீடித்தால் அநேகமாக உணவுகளின் விலையை 25 – 30 சதவீதத்தால் அதிகரிக்க நேரிடும்'' என்றார்.

## அரிசி இறக்குமதி...

ஒப்புக்கொண்டது போன்ற விநியோகம் இடம்பெற்றால் 05 கிலோ என்ற தடையை நீக்கி வழமைபோல் அரிசி விநியோகத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று (09) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''அரசாங்கத்தின் தீர்மானத்துக்கமைய அரிசி இறக்குமதிக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முதலாவது கட்ட இறக்குமதிக்காக 5,200 மெற்றிக் தொன் அரிசிக்கு விலைமனு கோரல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அரிசி தொகை இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர், அநேகமாக 16ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு கொண்டு வருவதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதற்கு மேலதிகமாக, மேலும் 5,200 மெற்றிக் தொன் அரிசி தொகையும் 20,800 மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான பொறுப்புகள் வெளிநாட்டு இறக்குமதியாளர்களுக்கும் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு கிலோ அரிசியை 220 ரூபாவுக்கு பெற்றுக்கொடுக்க முடியுமென எதிர்பார்க்கிறோம். தற்போதைய விலை நிலைவரங்களுக்கமைய, இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு 220 ரூபாவாக அரசாங்கம் விலை நிர்ணயம் செய்துள்ளது. எனவே, இந்த விலையிலேயே ச.தொ.ச.நிறுவனத்தினூடாக அரிசியை விநியோகிக்கக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

நத்தார் பண்டிகை காலத்திலும் நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப அரிசியை விநியோகிக்கக் கூடியதாக இருக்கும். தற்போதைக்கு நட்டரிசியை மாத்திரம் இறக்குமதி செய்யவே தீர்மானித்திருக்கிறோம். எதிர்காலத்தில் தேவைக்கு ஏற்ப ஏனைய அரிசி வகைகளையும் இறக்குமதி செய்யக் கூடியதாக இருக்கும்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில், நாட்டரிசியை 225 ரூபா மொத்த விலையிலும் 230 ரூபா சில்லறை விலைக்கும் பெற்றுக்கொடுக்க விநியோகஸ்தர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். எனவே, இந்த தொகையை அவ்வாறே பேண முடியுமென்று நம்புகிறோம். மொத்தமாக 70,000 தொன் அரிசியை இறக்குமதி செய்ய திட்டமிட்டிருக்கிறோம். ஜனவரி மாதம் 15ஆம் திகதியின் பின்னர் பெரும்போக பயிர்ச்செய்கைக்கான விளைச்சல் கிடைக்கப்பெறும்.

எனவே, நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி தொகையுடன் மொத்தமாக கணக்கெடுத்தால் தேவையை நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். அவ்வாறு நிவர்த்தி செய்ய முடியாவிட்டால் மீண்டும் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கிறோம். தரமான அரிசியை இறக்குமதி செய்யவே திட்டமிட்டுள்ளோம். அரிசி நாட்டை வந்தடைந்தவுடன் அதுதொடர்பான தரப் பரிசோதனைகளை முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளோம். தரப் பரிசோதனை பரிந்துரைகளுக்கமையவே சந்தைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுப்போம்.

அரிசி இறக்குமதி மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தேசிய அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டது போன்ற விநியோகம் இடம்பெற்றால் 05 கிலோ என்ற தடையை நீக்கி வழமைபோல் அரிசி விநியோகத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். அரசாங்கம் தீர்மானித்தால் சிவப்பு அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுப்போம்'' என்றார்.

## அரசியல்...

நீண்டகால முற்போக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்ட மதுவரி அனுமதிப்பத்திரம் வெளியிடுவதற்கான புதிய நடைமுறையை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக முறைகேடாக பயன்படுத்துவதானது கவலையளிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த முறையை தொடர்வதா இல்லையா அல்லது புதிய மதுவரி சட்டத்தை சமர்ப்பிப்பதா என்பதை பாராளுமன்ற அனுமதியுடன் அமைச்சரவையே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கியமை தொடர்பில் வெளியாகியுள்ள சர்ச்சைகள் தொடர்பில் தெளிவுபடுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''சுதந்திரத்தின் பின்னர் 2022ஆம் ஆண்டுவரை மதுவரி அனுமதிப்பத்திரத்துக்காக அரசாங்கத்தால் கட்டணம் அறவிடப்படவில்லை. அதுவரையில் நேரடி வரிகளில் அதிக வீழ்ச்சியே பதிவாகியுள்ளது. வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்காக முறையான நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றத்திலும் செயற்குழுக்களிலும் அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, நேரடி வரி இல்லாமல் போகின்றமைக்கான மாற்றுத் தீர்வாக அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ள கட்டணத்தை அறவிட்டு மதுவரி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட உரையில் V இலக்கப் பகுதியின் கீழ் முன்வைக்கப்பட்ட மதுவரி நிர்வாகத்தை மேம்படுத்தும் முறைகள் மற்றும் வரிக் கொள்கை திருத்தம், வெவ்வேறு வகையான மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கான விதிமுறைகளை சட்டபூர்வமாக்கல், புதிய அளவுகோள்களை அறிமுகப்படுத்துதல், அனுமதிப் பத்திரங்களுக்கு அதிகபட்ச வரையறைகள் விதிப்பதற்கான தீர்மானம், மதுவரி சேவைக்காக நிர்வாக கட்டணத்தை பெற்றுக்கொடுத்தல், கேள்வி நிலைக்கு ஏற்ப அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணத்தை அதிகரித்தல் ஆகிய யோசனைகள் அடங்கிய அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், அதற்கான வர்த்தமானி அறிவித்தலுக்கும் பாராளுமன்றத்தில் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அரசியலமைப்பின் 148 மற்றும் 152 வரையான உறுப்புரைகளின் பிரகாரம் அரச நிதி, நிர்வாகம் தொடர்பான முழு அதிகாரம் பாராளுமன்றத்திடமே இருக்கிறது. அதற்கு மேலதிகமாக அரச நிதி பொறுப்பு சட்டத்தின் 3ஆவது உறுப்புரை அரசியலமைப்பு மேலதிகமான சட்டமாக செயற்பட்டு வருகிறது. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த தீர்மானத்தை மேலும் பலப்படுத்தி மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் 03/2024 இலக்க மதுவரி அறிக்கையினூடாக அதுவரையில் நடைமுறையிலிருந்த கட்டணத்தை அதிகரித்து 2024, பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் புதிய திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

பொருளாதார அபிவிருத்திச் சட்டத்தின் 04ஆவது உறுப்புரையின் உள்ளடக்கங்களின் பிரகாரமே இந்த சகல செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக, 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி 1544/17 இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக அறிவிக்கப்பட்டிருந்த விதிமுறைகள் 2024, ஜனவரி மாதம் 12ஆம் திகதி 2366/39 இலக்கம் கொண்டு வர்த்தமானி அறிவித்தலினூடாக திருத்தியமைக்கப்பட்டது. இந்த சகல விடயங்களுக்கும் பாராளுமன்ற பொதுமக்கள் நிதி செயற்குழுவில் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய, மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வர்த்தகம் செய்ய முற்படும்போது அறவிடப்படும் 15 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக வருடாந்தம் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ஒரு மில்லியன் ரூபா மற்றும் 05 இலட்சம் ரூபா பாதுகாப்புக்கான பிணையக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும்.

நகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வர்த்தகம் செய்ய முற்படும்போது அறவிடப்படும் 10 மில்லியன் ரூபா கட்டணத்துக்கு மேலதிகமாக அனுமதிப் பத்திரங்களுக்கான வருடாந்த கட்டணமாக 08 இலட்சம் ரூபாவும் பாதுகாப்பு பிணையக் கட்டணமாக 05 இலட்சம் ரூபாவும் செலுத்தப்பட வேண்டும். ஏனைய பிரதேசங்களில் வர்த்தகத்தில் ஈடுபடும்போது அறவிடப்படும் ஒரு மில்லியன் ரூபா கட்டணத்துக்கு மேலதிகமாக அனுமதிப் பத்திரத்துக்காக வருடாந்தம் 06 இலட்சம் ரூபாவும் பாதுகாப்பு பிணையக் கட்டணமாக 05 இலட்சம் ரூபாவும் செலுத்தப்படவேண்டும். 1000 மில்லியன் ரூபாவை தாண்டும் வர்த்தக கட்டடம் அல்லது வர்த்தக நிலையம் அல்லது வர்த்தகத்துக்கு பிரவேசிக்கும்போது அறவிடப்படும் 15 மில்லியன் ரூபா கட்டணத்துக்கு மேலதிகமாக அனுமதிப் பத்திரத்துக்கான வருடாந்த கட்டணமாக 1.5 மில்லியன் ரூபாவும் பாதுகாப்பு பிணையக் கட்டணமாக 05 இலட்சம் ரூபாவும் செலுத்த வேண்டும்.

புதிய திருத்தத்துக்கமைய, கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒக்டோபர் 31ஆம் திகதிவரை, மதுவரி அனுமதிப்பத்திர வகைப்படுத்தலின் F.L.4 கீழ் இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களை சில்லறை விலைக்கு அப்பால் விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் 172 மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் 1000 மில்லியன் ரூபாவை தாண்டும் விற்பனை கட்டதொகுதி அல்லது நிலையங்கள் என்ற அடிப்படையில் 89 புதிய மதுபான அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. மதுவரித் திணைக்களத்தின் சட்ட ஒழுங்கு மற்றும் விதிமுறை செயற்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோல், மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மாத்திரமே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. அந்த விதிமுறைகளுக்கு அப்பால் எந்தவொரு மதுவரி அனுமதிப்பத்திரமும் வெளியிடப்படவில்லை. இதனூடாக அரசாங்கம் 09 மாத காலப்பகுதியில் 3.1 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இலாபமீட்டியுள்ளது. இந்த முறை நவம்பர், டிசம்பர் மாதங்களில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இந்த வருடத்தில் 04 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக அரச வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும். இதனூடாக கிடைக்கும் வருமானத்தில் 25 சதவீதத்தை ஒதுக்கீடு செய்து நிதியமொன்றை ஸ்தாபிக்கவும் அதனை அபிவிருத்திகளுக்காக பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டிருந்தது.

மேலும், இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை புதிய மதுவரி சட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களுடன் தொடர்புடைய மதுவரித் திணைக்களத்துக்கு கிடைத்த மக்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் அந்த அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, அதற்கு எதிராக அனுமதிப்பத்திர உரிமையாளர்களினால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நீதிமன்றத்தினால் கடந்த ஓகஸ்ட் மாதம் 09ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் கடந்த தேர்தல் காலப்பகுதியில் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் வழங்குவதென்றால் அதற்கான முறையான விதிமுறைகளை பின்பற்றி வெளிப்படைத்தன்மையுடன் அரசியல் பிரசாரங்களுக்காகவன்றி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் மதுவரி ஆணையாளர் நாயகத்துக்கு கடந்த 2024.08.19ஆம் திகதி கடிதத்தினூடாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அனுமதிப் பத்திரம் வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட விதிமுறைகள் சட்டபூர்வமானது என்பது உறுதியாகிறது. கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் எந்தவொரு மதுபானசாலை அனுமதிப்பத்திரமும் அரசியல் நன்றியுணர்வுக்காக வழங்கப்படவில்லை. அனுமதிப்பத்திரங்களை வழங்கி அரசாங்கத்துக்கு ஓரளவு வருமானத்தை பெற்றுக்கொள்ளவே நடவடிக்கை எடுத்தோம். வரி வருமானத்துக்கு அப்பால் புதிய வருமான மூலோபாயமாக இந்த அனுமதிப்பத்திர விற்பனை செயற்பாடுகள் அமையப்பெற்றிருந்தன. வங்குரோத்து நிலைமையிலிருந்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக நீண்டகால முற்போக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த மதுவரி அனுமதிப்பத்திர விநியோக செயற்பாட்டை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக முறைக்கேடாக பயன்படுத்துவது கவலையளிக்கிறது. தற்போது நடைமுறையிலுள்ள வெளிப்படையானதும் முறையானதுமான வருமான வழிமுறையை நீக்குவதா இல்லையா, அல்லது புதிய மதுவரி சட்டத்தை சமர்ப்பிப்பதா என்பதை பாராளுமன்ற அனுமதியுடன் அமைச்சரவையே தீர்மானிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் கார்த்திகை மாதம் 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** ஆணவத்தால் அவமானமடைய வேண்டி வரும். பணத்தின் பெருமையை அறியும் நாள்.

**ரிஷபம்** புதிய நண்பர்கள் தொடர்பால் புதிய உறவினை ஏற்படுத்திக் கொள்வீர்கள். தேவைக்கேற்ப பணம் கிடைக்கும்.

**மிதுனம்** உங்கள் கீழ் உள்ளவர்களை நம்பி எதையும் செய்யலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும்.

**கடகம்** தந்தையின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். தர்ம சிந்தனையுடன் செயலாற்றுங்கள்.

**சிம்மம்** புதிய தொழில் வியாபாரங்களை ஆரம்பித்தால் சிக்கல் உண்டு. செலவு செய்யும்போது சிந்தித்துச் செய்யுங்கள்.

**கன்னி** வாகனங்களால் அதிக சுகமும் இலாபமும் உண்டு. புகழ், செல்வாக்கு சிறப்பாக அமையும்.

**துலாம்** எதிரிகள் உங்களிடம் பணிந்து நடந்து கொள்வார்கள். தற்காலிக தொழில் வியாபாரத்தில் நல்ல இலாபம்.

**விருச்சிகம்** சரியான முடிவுகளை எடுக்க முடியாது திண்டாடுவீர்கள். அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்காதீர்கள்.

**தனுசு** வாகனங்களில் தூரப் பயணங்களை ஒத்தி வைப்பது நல்லது. அனைத்தும் மந்த கதியில் இயங்கும்.

**மகரம்** முயற்சிகள் அனைத்தும் பலிக்கும் நாள். நினைத்த காரியத்தை முடித்தே தீருவீர்கள்.

**கும்பம்** உங்கள் மதிப்பையும் கௌரவத்தையும் நீங்களே கெடுத்துக் கொள்வீர்கள். வீண் பேச்சு வேண்டாம்.

**மீனம்** நீங்கள் விரும்பிய உணவு, படுக்கை அமையும். முக மலர்ச்சியுடன் சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள்.

**திதி:**தசமி பி.இ.3.43 வரை பின் ஏகாதசி

**நட்சத்திரம்:**உத்தரட்டாதி பி.ப.1.30 வரை பின் ரேவதி

**பிறை:**வளர்பிறை

**யோகம்:**அமிர்த யோகம்; பி.ப.1.30 வரை பின் சித்த யோகம்

**வார சூலை:**வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்:**காலை- 8.12 – 9.12 மணி வரை பகல்- 12.12 – 1.12 மணிவரை மாலை- 4.42 – 6.42 மணிவரை

**ராகு காலம்:**3.42 – 4.42 மணிவரை

**எமகண்டம் :**9.12 – 10.41 மணிவரை

**குளிகை :**12.12 – 1.41 மணிவரை

**சந்திராஷ்டமம்:** சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 1.30 மணிவரை**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 1.30 மணிக்குமேல்**

அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் போக்குவரத்து கட்டணம் குறைப்பு

## பரீட்சைகள் ஆணையாளர் விளக்கமளிக்க வேண்டுமென ஆசிரியர் சங்கம் கோரிக்கை



2024 உயர்தரப் பரீட்சைகளுக்கான பரீட்சை கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவுகளை குறைப்பது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ள இரண்டு சுற்று நிருபங்கள் தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

நவம்பர் முதலாம் திகதி வெளியிடப்பட்ட முதலாவது சுற்றறிக்கையின்படி, பரீட்சை நிலையங்களுக்கிடையிலான தூரம் 10 கிலோ மீற்றருக்கு அதிகமானதாக இருந்தால் 1000 ரூபா வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், நவம்பர் 08ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த இரண்டாவது சுற்றறிக்கையில் அந்த தொகை 500 ரூபாவாக குறைக்கப்பட்டிருந்தது. அதேபோல முதலாவது சுற்றறிக்கையில் குறிப்பிட்டதன்படி, 05 முதல் 10 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட தூரத்துக்கு 750 ரூபாவாக ஒதுக்கப்பட்டிருந்த தொகை 400 ரூபாவாக குறைக்கப்பட்டது.

மேலும், 02 முதல் 05 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட தூரத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த 500 ரூபா கொடுப்பனவு 300 ரூபாவாகவும் 02 கிலோ மீற்றருக்கு குறைவான தூரத்துக்கு ஒதுக்கப்பட்ட 300 ரூபா கொடுப்பனவு 200 ரூபாவாகவும் இரண்டாவது சுற்றறிக்கையின்படி குறைக்கப்பட்டது.

புதிய சுற்றறிக்கை மூலம் இந்த போக்குவரத்து கொடுப்பனவுகளை திருத்தம் செய்து குறைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இந்த மாற்றம் கடமையாற்றும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமையை ஏற்படுத்தியமை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விளக்கமளிக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார். உதவித்தொகை உறுதியளித்தால், கூறியபடி வழங்க வேண்டும் என ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களத்தை அகில இலங்கை ஆசிரியம் சங்கம் கோரியுள்ளது.

# பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்

## அமெரிக்க தூதுக்குழுவினர் சபாநாயகரிடம் உறுதி



ஐக்கிய அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லு (Donald Lu) தலைமையிலான உயர்மட்ட அமெரிக்கத் தூதுக் குழுவினர் சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வலவை பாராளுமன்றத்தில் சந்தித்தனர்.

ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பின் (USAID) ஆசியப் பணியகத்தின் துணை உதவி நிர்வாகி அஞ்சலி கௌர் (Anjali Kaur), அமெரிக்காவின் திறைசேரி திணைக்களத்தின் ஆசியாவுக்கான துணை உதவிச் செயலாளர் ரெபேர்ட் கப்ரொத் (Robert Kaproth) உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் இந்தத் தூதுக் குழுவில் உள்ளடங்கியிருந்தனர்.

பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சி தொடர்பில் பொதுமக்களிடமிருந்து கிடைத்த ஆணையை இலங்கையில் தொடர்ந்தும் முன்னோக்கிக் கொண்டுசெல்வது தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பு இலங்கைக்குத் தொடர்ந்து வழங்கிவரும் ஒத்துழைப்பு குறித்து நன்றி தெரிவித்த சபாநாயகர், பல்வேறு திட்டங்களின் ஊடாக மக்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்த முடிந்தமையையும் சுட்டிக்காட்டினார். பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்த அமெரிக்காவின் ஆதரவை எதிர்காலத்திலும் எதிர்பார்ப்பதாக சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையின் முன்னேற்றம் மற்றும் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதில் அமெரிக்கா தொடர்ந்தும் உதவி வழங்கும் என்றும் தூதுக்குழுவினர் உறுதியளித்தனர்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பின் இலங்கைக்கான பணியகத்தின் பணிப்பாளர் கேப்ரியல் க்ரொவ், சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளர் ரத்னபிரிய அபேசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

**வாகன ஏலத்திற்கு — கொட்டாவ**

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| WP BFN-87xx | BAJAJ | CT 100 |
| WP BHT-36xx | BAJAJ | CT 100 |
| WP BBZ-76xx | BAJAJ | PLATINA 100 |
| SG BER-94xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| WP BHT-97xx | BAJAJ | CT 100 |
| WP BHA-21xx | BAJAJ | PULSAR 150 |
| WP BEM-07xx | BAJAJ | CT 100 |
| WP BGO-68xx | BAJAJ | CT 100 |
| WP- BIT-74xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| NW BGS-45xx | HONDA | DIO SCV 110 |
| WP BDL-74xx | HONDA | DIO SCV 110 |
| WP BGK-00xx | HONDA | DIO SCV 110 |
| WP BFG-39xx | HONDA | DIO SCV 110 |
| WP BFA-75xx | HONDA | DIO SCV 110 |
| NW-BCD-63xx | HONDA | DIO SCV 110 |
| WP BDJ-33xx | HONDA | DIO SCV 110 |
| WP BGW-73xx | HONDA | GRAZIA APPS |
| UP BDP-26xx | HONDA | DIO SCV 110 |
| NW BGH-47xx | HONDA | DIO SCV 110 |
| WP BEP-89xx | HONDA | HORNET |
| WP BAQ-29xx | HONDA | DIO SCV 110 |
| WP BFS-66xx | HONDA | DIO SCV 110 |
| WP BDX-12xx | HONDA | DIO SCV 110 |
| WP BGH-91xx | HONDA | DIO SCV 110 |
| WP BEP-06xx | HONDA | DIO SCV 110 |
| WP BFD-95xx | HONDA | DIO SCV 110 |
| WP BIE-03xx | HONDA | DIO SCV 110 |
| WP BGM-06xx | HONDA | DIO SCV 110 |
| WP BDO-46xx | HONDA | DIO SCV 110 |
| WP BHT-36xx | HONDA | DIO SCV 110 |
| NW BHF-51xx | YAMAHA | FZ - S Ver 2.0 |
| WP BAK-98xx | YAMAHA | FZ-S |
| WP BIG-82xx | TVS | WEGO |
| WP BIC-62xx | TVS | NTORQ |
| UP BHB-20xx | TVS | NTORQ |
| WP BIH-02xx | TVS | NTORQ |
| SG BFV-87xx | TVS | WEGO |
| WP BIH-94xx | TVS | NTORQ |

பார்வையிடுதல் கம்பனி வாகன வளாகத்தில்10 டிசம்பர் 2024 (மு.ப.8.30மணி முதல் பி.ப.4.30வரை) 11 டிசம்பர் 2024 (மு.ப.8.30மணி முதல் பி.ப.10.30வரை)

இலக்கம்.17/1, பின்ஹேன சந்தி, ஹொரண வீதி,கொட்டாவ வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

மோட்டார் சைக்கிள் விற்பனை திகதி:11ஆம் திகதி டிசம்பர் 2024 காலை 10.30மணி
சுகாதர நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்துப்படுகின்றது
நிபந்தனைக்கு உட்பட்டது

விஸ்வா:–0774787096 விதுரங்க:–0774229302

துரிதஅழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:–0710356125

A N ALGEWATHTHA AUCTIONEER

அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மீது யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு!

**(பு.கஜிந்தன்)**

யாழ்ப்பாண மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சு னாவுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அனுமதியின்றி பிரவேசித்து, பணிக்கு இடையூறு செய்ததாக பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மீது முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தியை தொடர்பு கொண்டு வினவியவேளை, பாராளுமன்ற உறுப்பினர் அனுமதி பெறாமல் வைத்தியசாலைக்குள் நுழைந்து தர்க்கம் செய்ததாகவும் வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித் ததாகவும் தெரிவித்துள்ளார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2024 டிசம்பர் 10ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# சிரியா சொன்ன பாடம்!

சிரியாவில் ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் தலைமையிலான கிளர்ச்சிக் குழு டமாஸ்கஸை கைப்பற்றியுள்ள அதேசமயம், அந்நாட்டின் ஜனாதிபதி அசாத் நாட்டைவிட்டு வெளியேறி ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார்.

பஷார் அல் - அசாத் குடும்பம் சிரியாவை இரும்புக்கரம் கொண்டு 53 ஆண்டுகள் ஆட்சி செய்தது. இப்போது அது முடிவுக்கு வந்துவிட்டது. ஜனாதிபதி பஷார் அல்-அசாத் 2000ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தார். அதற்கு முன்னதாக அவரின் தந்தை ஏறக்குறைய 30 ஆண்டுகள் சிரியாவை ஆட்சி செய்தார். பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் நாட்டின் அமைதியான, ஜனநாயக சார்பு எழுச்சியை அடக்கினார். அது பேரழிவு தரும் உள்நாட்டுப் போராக மாறியது. இதில் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். 12 மில்லியன் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஆனால், கடந்த புதன்கிழமை ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் எனப்படும் இஸ்லாமியவாத அரசாங்க எதிர்ப்புக் குழு வடமேற்கில் ஒரு பெரிய தாக்குதலை வெற்றிகரமாக வழிநடத்தியது. கிளர்ச்சியாளர்கள் சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவை கைப்பற்றினர். பின்னர் சிரிய இராணுவம் வீழ்ச்சியடைந்ததால், தலைநகர் டமாஸ்கஸுக்கு கிளர்ச்சிப் படை முன்னேறியது.பல சிரியர்கள் தாங்கள் ஒரு புதிய சுதந்திர உணர்வை உணர்வதாகக் கூறுகிறார்கள். சிலர் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள்.

முன்னதாக ரஷ்யா, ஈரான் மற்றும் ஈரானிய ஆதரவு ஆயுதக்குழுவின் உதவியுடன் ஜனாதிபதி அசாத் தலைமையிலான அரசு நாட்டின் பெரும்பாலான நகரங்களின் மீதான கட்டுப்பாட்டை மீட்டெடுத்த பிறகு சிரியாவில் நீண்டகாலமாக நடந்து வந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்துவிட்டதாக உணரப்பட்டது.

உள்நாட்டுப் போரின் மையமாக இருந்த பகுதிகள் பெரும்பாலும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தன.

ஆனால், அமெரிக்கா மற்றும் சிரிய ஜனநாயகப் படையின் ஆதரவு பெற்ற குர்திஷ் இனக் குழு தலைமையிலான கூட்டணியால் கட்டுப்படுத்தப்பட்ட வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகள் அரசின் கட்டுப்பாட்டில் இல்லை.அலெப்போ, இட்லிப் ஆகியவையே கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த கடைசி பகுதிகளாக இருந்தன. இவை, துருக்கி எல்லையில் அமைந்துள்ளன. அங்கு வசித்து வந்த 40 இலட்சம் மக்களில் பலரும் இடம்பெயர்ந்தனர்.

இந்தப் பகுதிகள் ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (HTS) ஆயுதக் குழுப் படைகளின் ஆதிக்கத்தில் இருந்தன. ஆனால், பிற கிளர்ச்சிப் பிரிவுகளும் ஜிஹாதி குழுக்களும் அங்கு செயற்பட்டன. சிரிய தேசிய இராணுவம் (SNA) என அறியப்படும் துருக்கிய ஆதரவு கிளர்ச்சிப் பிரிவுகளும் அங்குள்ள சில பகுதிகளை துருக்கிய படைகளின் ஆதரவுடன் கட்டுப்படுத்தின.

அலெப்போ நகரை நோக்கி முன்னேறிய ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் ஆயுதக்குழுவினர் சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவின் பெரும்பகுதியை நவம்பர் 30 அன்று கைப்பற்றினர். தங்களது முழு அளவிலான தாக்குதலைத் தொடங்கிய மூன்று நாட்களில் இது நடந்தது.

அரசாங்கம் தனது துருப்புகள் மற்றும் பாதுகாப்புப் படைகளை விரைவாகத் திரும்பப் பெற்ற பின்னர் அவர்கள் அங்கு சிறியளவிலான எதிர்ப்பை மட்டுமே எதிர்கொண்டதாக அவர்கள் கூறினர்.

அசாத் தனது ஆதரவாளர்களின் உதவியுடன் கிளர்ச்சியாளர்களை ‘நசுக்க’ சபதம் செய்தார். ரஷ்ய போர் விமானங்கள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தங்கள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தின. ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கிளர்ச்சியாளர்கள் டமாஸ்கஸுக்குள் நுழைந்து நாட்டின் மிகவும் மோசமான இராணுவ சிறை என்று கூறப்படும் சைட்னாயாவில் இருந்த கைதிகளை விடுவித்ததாக அறிவித்தனர்.

இரண்டு மணிநேரத்துக்குள், அவர்கள் “கொடுங்கோல் ஆட்சியாளர் பஷார் அல்-அசாத் தப்பியோடிவிட்டார்” - என்று அறிவித்தனர். “அவர் ஆட்சியின் கீழ் 50 வருட அடக்குமுறை, 13 வருட குற்றங்கள், கொடுங்கோன்மை மற்றும் கட்டாய இடப்பெயர்வுக்குப் பிறகு, இருண்ட காலத்தின் முடிவையும் சிரியாவின் புதிய சகாப்தத்தின் தொடக்கத்தையும் நாங்கள் இன்று அறிவிக்கிறோம்” - என்று அவர்கள் கூறினர்.

அசாத்தின் பிரதமர் முஹமது அல்-ஜலாலி, “சிரிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு தலைமையுடனும் ஒத்துழைக்கத் தயார்” - என்று ஒரு வீடியோவில் அறிவித்தார்.இதைத் தொடர்ந்து சிரியாவிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் இருக்கும் சிரிய குடிமக்கள், ஜனாதிபதி அசாத்தின் ஆட்சி முடிவுக்கு வந்ததைக் கொண்டாடினர்.

சிரியாவின் அந்தக் காட்சிப்பதிவுகள் இலங்கையின் கோட்டா ஆட்சியை நினைவுபடுத்துகின்றன. மக்களின் எதிர்ப்புப் பேரணி, நாட்டிலிருந்து ஜனாதிபதி தப்பியோட்டம் , ஜனாதிபதியின் மாளிகை மக்களால் முற்றுகை, ஜனாதிபதியின் சொகுசு வாகனங்கள் மீட்பு என்றெல்லாம் வரும் செய்திகள் இலங்கையின் அரகலய போராட்டத்தையே நினைவுபடுத்துகின்றன.

ராஜபக்ஷக்களின் ஆட்சியின் கீழ் நீண்டகாலம் வாழ்ந்த மக்கள், பின்னொருகாலத்தில் அவர்களையே விரட்டியடித்த வரலாறை இன்று உலகமே பின்பற்றிக்கொண்டிருக்கிறது போலும்.

மியன்மர் ஆட்சிக்கவிழ்ப்பு பங்களாதேஷ் மக்கள் கிளர்ச்சியின் பின்னர் ஜனாதிபதியின் வெளியேற்றம், ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய தலிபான்கள் என்ற வரிசையில் இப்போது சிரியாவிலும் ஆட்சி மாற்றம் நடந்திருக்கிறது. என்னதான் உலகநாடுகள் பின்னணியில் இருந்தாலும் உள்நாட்டு மக்களே ஆட்சியாளர்களை ஜனநாயக தேர்தலுக்கப்பால் தீர்மானிக்கின்றனர் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

அதனால் இந்த ஆட்சி மாற்ற விடயத்தில் உலக நாடுகள் எடுத்துக்கொள்ள வேண்டிய முன்னுதாரணம் இருக்கிறது. அது, மக்களின் உணர்வுகளைப் புறந்தள்ளினால் அதற்குரிய விலையை செலுத்தவேண்டும் என்பதுதான். இலங்கையின் இப்போதைய ஆட்சியாளர்களுக்கும் இதில் ஒரு செய்தி இருக்கிறது. அதனை உணர்ந்துகொள்ளவேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு.

# குமுறிக்கொண்டிருக்கும் உறவுகளின் வலிகளும் வேதனைகளும் தீராதா?

*திவியா சிவகுமார்*





காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்கள் கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு என இன்றும் தீர்வின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. வீதியோரத்தில் தற்காலிக கொட்டகை அமைத்து போராட்டத்தை ஆரம்பித்த மக்கள் இரவு பகல் மழை வெயில் எனப் பாராது பல நாட்களாக அந்தக் கொட்டகைகளிலேயே தங்கியிருக்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

வாகன இரைச்சல் சத்தம், வீட்டிலுள்ள ஏனைய உறவுகளையும் பிரிந்து போராட்டக் களத்தில் இருக்கின்றமை, நீதி கிடைக்குமா என்ற ஏக்கம், அரசியல்வாதிகளின் போலி வாக்குறுதிகள், காலநிலைத் தாக்கம், சூழல் பாதிப்புகள், தொடர் விசாரணைகள் என்பவற்றால் நாளாந்தம் அந்த மக்கள் உடல், உள ரீதியாக பாதிப்படைந்து மிகவும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இப்போராட்டக் களத்திலுள்ள தாய்மாரில் அதிகமானவர்கள் வயது முதிர்ந்தவர்கள். அவர்களது உடல்கள் தொடர் போராட்டத்தால் இன்னும் மோசமடைந்து வருகின்றன. இன்னும் சில தாய்மார் போராட்டக் களத்திலேயே மடிந்தும் உள்ளனர். இந்த நிலையில், சர்வதேச அழுத்தம் காரணமாகக் கொண்டுவரப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகமும் போராட்டக் களத்திலுள்ள தாய்மாருக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. அந்த அலுவலகம் சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதற்கான ஒரு நகர்வே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தையோ அல்லது தீர்வையோ வழங்கக்கூடிய வகையில் அமையவில்லை என்பது அந்த மக்களின் குரலாகவுள்ளது.

இந்நிலையில், அந்த மக்களுக்கு ஆறுதலாகவும் உறுதுணையாகவும் இருந்து அவர்களது கோரிக்கையை வலுப்படுத்தி தீர்வைப்பெற அழுத்தம் கொடுக்கவேண்டிய தமிழ் அரசியல் தலைமைகள் அதனைக் கண்டு கொள்ளாமல் போகின்றனர். இதன் காரணமாக தமிழ்த் தலைமைகள் மீதும் மக்கள் அதிருப்தியடைந்து அவர்களும் அந்த மக்களிடம் இருந்தும் அவர்களது மனங்களில் இருந்தும் காணாமல் போகிறார்கள். இந்நிலையில், உள்நாட்டில் நம்பிக்கையிழந்த - பாதிக்கப்பட்ட அந்தத் தாய்மார் தமது நியாயமான கோரிக்கை தொடர்பிலும் நீதியான போராட்டம் தொடர்பிலும் நேரடியாக ஜெனீவா வரை சென்றும் முறையிட்டுள்ளனர். அந்தத் தாய்மாரின் நிலைமையைப் புரிந்து மனச்சாட்சியுடனும் இதய சுத்தியுடனும் சர்வதேச சமூகம் அணுக வேண்டும். அவர்களால் வழங்கப்படக்கூடிய அழுத்தங்களின் மூலம் அந்த மக்களுக்கான ஒரு நீதியைப் பெறமுடியுமென்ற நிலையே தற்போது உருவாகியுள்ளது. இதனைப் புரிந்து அனைத்து தரப்புகளும் இணைந்து பாதிக்கப்பட்ட அந்தத் தாய்மாருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க ஒன்றுபட முன்வரவேண்டும். தம் வாழ்வைத் தொலைத்தவர்கள் மீது தமிழர் அரசியல் துன்புறுத்தல்களை மேற்கொள்ளப் போகிறதா என்ற கேள்வியுடன் இந்தக் காணாமல் ஆக்கப்பட்டோர் தினமும் காத்திருக்கின்றனர்.

தமிழர் தாயகம் எங்கும் தமது உறவுகளைத் தொலைத்த பல்லாயிரக்கணக்கான பெற்றோர்கள், ஆயிரக்கணக்கான இளம் பெண்கள், நூற்றுக்கணக்கான குழந்தைகள் தங்களுடைய பிள்ளைகளை, கணவன்மாரை, தாய் தந்தையர்களை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு 15 ஆண்டுகளைக் கடந்திருக்கிறார்கள். ‘கண்ணீரும் சோறும் காலக்கரைதலும் அன்றி வேறில்லை’ என்பதாக அவர்களுடைய மகிழ்ச்சி, நிம்மதி, எதிர்காலம் பற்றிய கனவுகள் இழந்த மனிதர்களாக எங்களின் சக சமூகத்தவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். தான் சார்ந்த இனமும் நிலமும் எதிர்கால சந்ததியும் இனிமையும் மகிழ்ச்சியும் பெறவேண்டும் என்பதற்காக இன்னுயிர்களை அழித்து இறுதியில் உயிரை மட்டும் தாங்கி மீண்டபோது கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட செம்மலை புதைகுழி உட்பட பல்வேறு புதைகுழிகளில் உயிரோடு மூடப்பட்ட போது அந்தப் பிள்ளைகளின் உணர்வின் முனகலை எந்த இதயம் தாங்கிக் கொள்கிறது? இத்தகையவர்களின் கொடூரமான சித்திரவதை மிக்க அந்தப் பெற்றோர்களின் போராட்டம் இதயத்தை நிலைகுலையச் செய்கிறது.

இத்தகையவர்களின் ஈடேற்றத்துக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நீதி பெற்று வழங்குவதற்காக எங்களுக்காக போய்விட்ட அந்த உறவுகளுக்கு அவர்களுக்காக காத்திருக்கின்ற எஞ்சியவர்களுக்கு இறுதி நீதியை அடைந்து காண்பிப்பதற்காக வலுவான சட்ட ஆவணமொன்றை வழங்குகின்ற அந்தப் பணியும் நடைபெறக் கூடாது என்கின்ற

சில தமிழ் அரசியல் தலைவர்களின் வக்கிரம், வன்மம், இனச் சோரம் என்பன எண்ணி எது செய்வோம். இத்தனைக்குப் பின்னரும் தமிழ் பொது வேட்பாளர்களை நிராகரித்து நீதி கோரும் மக்கள் மனுவை குழப்பியடித்து சர்வதேச விசாரணைக்கு வழி கேட்கும் சட்ட ஆவணத்தை இல்லாமல் செய்ய வேண்டுமென்று துடிக்கின்ற தமிழ் அரசியல் தலைவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள் மீது அரசியல் சித்திரவதை ஒன்றைப் புரிகின்றனர். பேரினவாத படைகள் மேற்கொண்ட கொடூர இனப்படுகொலையை விட சொந்த இனத்தை கட்டமைக்கப்பட்ட மிக நுண்ணிய அரச சேவகத்தால் - செயல்களால் வாழ்ந்து கொண்டே இறக்கின்ற படுகொலைக்கு எமது மக்களை இட்டுச்செல்கின்ற தமிழ் தலைவர்களும் போருக்குப் பிந்திய அரசியல் குற்றவாளிகளே. அவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். எதிரிகளை விட துரோகங்கள் கொடூரமானவை. அதைவிடவும் சொந்த இனத்தையே சூழ்ச்சி செய்வது பட்டவர்த்தனமான தன்னினப்படுகொலையே. இத்தனை ஆயிரம் ஆயிரம் உறவுகளின் கண்ணீருக்காய் ஒவ்வொரு புதைகுழிகளிலும் முக்கி முனகி மூச்செடுக்க முடியாது அந்தரமாய் ஆவி பிரிந்த அந்தச் செல்வங்களுக்காக யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்த பின்னரும் தீர்வு கிடைக்காத நிலையே தொடர்கிறது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியிலும் யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியிலும் பலர் காணாமல் போகச் செய்யப்பட்டார்கள். இராணுவ சுற்றிவளைப்புகளின்போதும் பொலிஸ் மற்றும் புலனாய்வுத்துறையின் செயற்பாடுகளின்போதும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். அத்துடன், இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவத்தினரதும் அரசாங்கத்தினதும் கோரிக்கைக்கமைவாக விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பலர் சரணடைந்திருந்தார்கள்.

இன்னும் சிலர் பலர் முன்னிலையில் அவர்களது குடும்ப உறுப்பினர்களால் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டனர். முன்னைய மஹிந்த அரசாங்கம் சரணடைந்த மற்றும் கையளிக்கப்பட்ட 12 ஆயிரம் வரையான விடுதலைப் புலி உறுப்பினர்களை புனர்வாழ்வளித்து விடுதலை செய்திருந்தது.

சரணடைந்த மற்றும் கையளிக்கப்பட்ட இன்னும் சிலர் காணாமல் போயிருந்தனர். இராணுவ புனர்வாழ்வு நிலையங்களில் இருப்பதாக ஆதாரங்கள் வெளியாகியிருந்த சிலரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது பிள்ளைகள் எப்போது வருவார்கள், தமது கணவன்மார் எப்போது வருவார்கள், தன்னுடைய அப்பா எப்போது வருவார், தன்னுடைய சகோதரர்கள் எப்போது வருவார்கள் எனப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த மஹிந்த அரசாங்கத்தின் காலத்தில் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வெள்ளைவான்களுக்கு மத்தியிலும் மக்கள் வீதிகளில் நீதி கேட்டு ஜனநாயக ரீதியாகப் போராடியிருந்தார்கள். இத்தகைய மக்களது போராட்டங்கள் சர்வதேச கவனத்தையும் ஈர்த்திருந்தது. அரசியல் தீர்வு என்பது ஒரு நீண்ட விடயம். ஆனால், மீள்குடியேற்றம், வாழ்வாதாரப் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, காணி விடுவிப்பு என கண்முன்னே உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பல அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளன.

அவற்றைத் தீர்ப்பதற்குக் கூட மைத்ரி, கோட்டாபய, ரணில் போன்ற அரசாங்கத்துக்கு போதிய அழுத்தம் கொடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக, அரசாங்கத்தை சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுவிக்க கூட்டமைப்பு தலைமை உதவியுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மக்களது தரப்பாக சர்வதேச இராஜதந்திர நகர்வுகளிலும் தோல்வி கண்டுள்ளது.

இன்று வன்னியில் இருந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்களின் ஒருவரின் கருத்தைப் பதிவுசெய்துள்ளேன். ‘‘நான் வவுனியா காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவணிதா. நாங்கள் உண்மை மற்றும் நீதிக்காக 2,800 நாட்களுக்கு மேலாக இடைவிடாத முயற்சியில் ஒன்றுபட்டு நிற்கிறோம். 2009ஆம் ஆண்டு மூன்றாம் மாதம் நான்காம் திகதி தான் எனது மகள் காசிப்பிள்ளை ஜெரோனி கடத்தப்பட்டார். நாங்கள் இரட்டை வாய்க்காலில் இருந்து மாத்தளன் நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது இடையில் வைத்து என்னையும் எனது மகளையும் பிடித்தார்கள். நான் எனது மகளை அவர்களிடம் விட்டுக் கொடுக்கவில்லை.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இன்றைய நாளில்...

- 1655 – யாழ்ப்பாணத்தின் போர்த்துக்கேய ஆளுநர் அன்டோனியோ டி மெனேசா மன்னாரிலிருந்து கொழும்பு செல்லும் வழியில் முகத்துவாரம் எனும் இடத்தில் டச்சுப் படைகளினால் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- 1901 – முதலாவது நோபல் பரிசு வழங்கும் நிகழ்வு ஸ்டக்ஹோம் நகரில் இடம்பெற்றது.
- 1948 – மனித உரிமைகள் குறித்த அனைத்துலகப் பிரகடனத்தை ஐ.நா. பொதுச் சபை அறிவித்தது. இந்நாள் உலக மனித உரிமைகள் நாளாக அறிவிக்கப்பட்டது.
- 1953 – பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.
- 1984 – ஐக்கிய நாடுகள் பொதுச் சபை சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டது.

## நக்கல் நமசிவாயம்



# ஆண்டான்குளம் கிராமத்தின் குறைபாடுகள் தொடர்பாக ரவிகரன் எம்.பி.ஆராய்வு

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆண்டான்குளம் கிராமத்துக்குச் சென்ற வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அக்கிராமத்தின் குறைபாடுகளை கேட்டறிந்ததுடன், ஆண்டான்குளம் ஆதி ஐயனார் ஆலயத்தில் வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

ஆண்டான்குளம் கிராமத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு அங்கிருந்து இடம்பெயர்ந்த நிலையில், தற்போது வரையில் அவர்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை. இருப்பினும், அங்குள்ள தமது விவசாய நிலங்களில் தமிழ் மக்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன், கால்நடை வளர்ப்பு, நன்னீர் மீன்பிடி போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், அங்குள்ள மக்களின் இடர்பாடுகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேட்டறிந்தார்.

குறிப்பாக, குமுழமுனை நாகதம்பிரான் ஆலய சந்தியிலிருந்து ஆண்டான்குளம் ஐயனார் கோயில் வரையான வீதி மற்றும் குறித்த வீதியிலிருக்கும் இரண்டு பாலங்கள் உடைந்து சேதமடைந்து காணப்படுகின்றன. அத்தோடு, ஆண்டான்குளத்திலிருந்து நித்தகைக்குளம் வரையான வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.



இதனால் பெரியவெளி, ஆத்தங்கடவை, ஆண்டான்குளம், விண்ணாங்கம்வெளி, நித்தகைக்குளம், ஆலடிக்குளம், படலைக்கல்லு, திருக்கோணம் வயல், பூவரசம்வெளி ஆகிய வயல் நிலங்களில் சுமார் 2000 ஏக்கருக்கும் மேல் நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக, விவசாயத்துக்கான உள்ளீடுகளைக் கொண்டுசெல்லும்போதும் வயல் காவலுக்கு செல்லும்போதும் அறுவடையின் பின்னர் நெல்லைக் கொண்டுவருவதிலும் அவர்கள் பலத்த போக்குவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அதேபோல், அப்பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்களும் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களும் இவ்வாறான போக்குவரத்துச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த வீதிகளையும் பாலங்களையும் சீரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்களால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஆண்டான்குளம் பகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களது மீள்குடியேற்றம் தொடர்பிலும் தம்மால் கூடிய கவனம் செலுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

# காற்றழுத்த தாழ்வுநிலை மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும்

## வானிலையாளர கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா

பு.கஜிந்தன்

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் தோற்றம் பெற்ற காற்றழுத்த தாழ்வுநிலை மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து தற்போது பாணமையிலிருந்து தென்கிழக்குத் திசையில் 548 கி.மீ. தொலைவில் காணப்படுகின்றது. இது மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து இன்று (10) இலங்கையின் கிழக்கு கடற்கரைக்கு சமாந்தரமாக (கிழக்கு மாகாணத்திலிருந்து 230 கி.மீ. தொலைவிலேயே அதன் மையம் காணப்படும்) வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகருமென எதிர்பார்க்கப்படுகிறது - என யாழ்ப்பாண பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவரும் சான்றுபடுத்தப்பட்ட வானிலையாளருமான கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை சில இடங்களில் மிதமான மழையும் சில இடங்களில் ஓரளவு மழை வீழ்ச்சியும் கிடைக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக, 10, 11 மற்றும் 12ஆம் திகதிகளை உள்ளடக்கிய 72 மணித்தியாலங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் 150 மி.மீக்கு கூடுதலாக மழைவீழ்ச்சி பதிவாக வாய்ப்புள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்குப் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது. இந்தக் காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வளிமண்டல சாரீரப்பதன் மாற்றம் காரணமாக அடுத்த சில நாட்களுக்கு குளிரான வானிலை நிலவும்.

அதேவேளை, எதிர்வரும் சனிக்கிழமை (14)அன்று இந்தோனேஷியாவின் பண்டா அச்சே மாநிலத்துக்கு வடக்கே காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும். இது சிறியளவிலான புயலாக மாறுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இதுவும் ஆரம்பத்தில் மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து பின்னர் வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் வாய்ப்புள்ளது. தற்போதைய நிலையில் இதன் நகர்வுப் பாதையும் நகரும் திசையும் கரையைக் கடக்குமென எதிர்பார்க்கப்படும் இடமும் அவசியம் கவனிக்கப்பட வேண்டியது. இது தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் – என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளாலி மக்களுக்கான குடிநீர் இணைப்புக்கான நடமாடும் சேவை

கிளிநொச்சி நிருபர்

பளை பிரதேச செயலாளர் பிரிவில் கிளாலி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர் விநியோகத்துக்கான நடமாடும் சேவையானது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் நாளை புதன்கிழமை (11) காலை 10 மணி முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்போது நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் மக்களின் வீடுகளுக்குச் சென்று நீர் இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை வழங்கி அவற்றைப் பூர்த்திசெய்யும் அறிவுறுத்தல்களையும் வழங்குவார்கள் எனவும் நீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளவுள்ள பொதுமக்கள் தங்களது தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி, காணி ஆவணத்தின் நிழற்பிரதி (காணி ஆவணம் இல்லாதவர்கள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்படுகின்ற விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும்) ஆகியவற்றுடன் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து கையளிக்க வேண்டுமெனவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

# கோவில்குளத்தில் சடலம் மீட்பு

வவுனியா நிருபர்

வவுனியா, கோவில்குளம் சந்திக்கருகில் அமைந்துள்ள கடைத்தொகுதிக்கு முன்பாக முதியவர் ஒருவரின் சடலமொன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, கோவில்புதுக்குளத்தைச் சேர்ந்த 63 வயதுடைய எம். விஜயரத்தினம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியாவில் பொலிஸார் திடீர் சோதனை: பலருக்கு எதிராக வழக்குப் பதிவு!

வவுனியா நிருபர்



வவுனியா நகரம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்ததுடன், டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த பலருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்துள்ளனர்.

கடந்த சில நாட்களாகப் பெய்த மழை காரணமாக டெங்கு நோய்த் தாக்கமும் வவுனியாவில் அதிகரித்து வருகின்றது.

இதனையடுத்து வவுனியா நகரம் மற்றும் நகரையண்டிய பகுதிகளிலுள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள் என்பவற்றில் வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் (08) திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, ரயர்கள், சிரட்டைகள், வெற்றுப் போத்தல்கள் என பல இடங்களில் காணப்பட்டதுடன், அவற்றில் நீர் தேங்கி நுளம்புக் குடம்பிகளும் இனங்காணப்பட்டன. அவ்வாறு இனங்காணப்பட்ட இடங்களின் வீட்டு உரிமையாளர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவுசெய்தனர்.

இதேவேளை, டெங்குநோய்த் தாக்கம் அதிகரித்து வருவதால் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தமது அயல் பகுதிகளை நுளம்புகள் பெருகாதவண்ணம் சுத்தமாக வைத்திருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ள நடைபாதை கடைகளை அகற்றுமாறு நகரசபை உத்தரவு!

வவுனியா நிருபர்

வவுனியாவில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் காணப்படும் நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அகற்றுமாறு வவுனியா நகரசபைச் செயலாளரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலுப்பையடிப்பகுதி மற்றும் சந்தைக்கு அண்மித்த பகுதிகள், வைத்தியசாலை வீதி ஆகியவற்றில் வியாபாரத்தை முன்னெடுத்துவரும் நடைபாதை கடைகளை அகற்றுமாறே குறித்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இன்று 10ஆம் திகதிக்கு முன்னராக இவ்வியாபார நிலையங்களை அகற்றுமாறு கோரப்பட்டுள்ளதுடன், அந்தத் தினத்தில் அகற்றப்படாதுவிடின் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையை நகரசபை முன்னெடுக்குமென்று செயலாளரால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், வவுனியா மாவட்ட செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரப்பகுதிகளிலுள்ள நடைபாதை வியாபார நிலையங்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக, நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பிரதான வீதிகளினூடாக பயணம் செய்கின்றனர். இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன், போக்குவரத்து நெருக்கடி நிலையும் ஏற்படுகின்றது.

இது தொடர்பாக வவுனியா நகரசபைக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுவந்த நிலையிலேயே குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை கட்டுப்படுத்த விசேட சிறப்புத்திட்ட செயற்பாடு

## விவசாய – காணி அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

எம்.ஏ.அமீனுல்லா



வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைக்கும் பணியில் விவசாயத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பங்கேற்புடன் விவசாயத் திணைக்களத்தின்கீழ் நிறுவப்பட்ட தனிப் பணியகத்தால் விசேட சிறப்புத் திட்டம் விரைவில் செயற்படுத்தப்படுமென விவசாயம், கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே. டி லால்காந்த தெரிவித்தார்.

இதற்காக விவசாயத் திணைக்களம், விவசாயிகள், கல்வியியலாளர்கள், சுற்றுச்சூழல் அமைப்புகளை ஒருங்கிணைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் (08) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த லால்காந்த மேலும் கூறியதாவது,

இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகளை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருந்தபோதிலும் இதுவரை அதற்கான எந்தவொரு தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

தற்பொழுது இப்பிரச்சினை தீவிரமடைந்துள்ளதால் பயிர்ச்சேதம் மட்டுமன்றி, இது தொடர்பான வேறுபல பிரச்சினைகளும் ஆங்காங்கே எழுந்துள்ளன.

விவசாயிகள் விவசாயத்தைக் கைவிடும் அளவுக்குப் பிரச்சினை தற்போது தீவிரமடைந்துள்ளது. விவசாயிகளுக்கு இப்போது நீண்டகால தீர்வை விட குறுகிய கால தீர்வுகளே தேவைப்படுகின்றன.

இப்பிரச்சினையை சமநிலையோடு பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். தீவிரவாதமாகப் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். எவராகவிருந்தாலும் குறித்த பிரச்சினைத் தீர்வுக்கு அனைவரும் பங்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும் என்றார்.

# நுவரெலியாவில் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது

நானுஓயா நிருபர்

நுவரெலியா உடப்புஸல்லாவ பிரதான வீதியில் விக்டோரியா பூங்கா பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக உள்ள கடையொன்றில் நேற்று முன்தினம் (08) இரவு மாவா போதைப்பொருளை விற்பனை செய்து வந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து குறித்த கடையில் மறைத்து வைத்திருந்த 4 கிலோ 200 கிராம் மாவா போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், சந்தேகநபர் நானுஓயா பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனவும் அவரை நேற்று (09) நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பன்விலையில் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்




ம.நவநீதன்

பன்விலை நகரில் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சர்வமதத் தலைவர்கள், பன்விலை நகர வர்த்தகர்கள், சிவில் சமூக அமைப்பின் அங்கத்தவர்கள், தோட்டப்புற மக்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (08)




பிற்பகல் இவ்வார்ப்பாட்ட ஊர்வலம் பன்விலை காலகடை பிரதேசத்திலிருந்து ஆரம்பமாகி பஸ் தரிப்பு நிலையம் வரை சென்றதுடன் பொதுக் கூட்டமொன்றும் இடம்பெற்றது. பன்விலை பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

சகல மக்களும் ஒன்றாக இணைந்து வாழும் அமைதிப் பிரதேசமான பன்விலை நகரில் மதுபான சாலையொன்றை அமைப்பது பிரதேசத்தின் அமைதிக்கு பாதிப்பை ஏற்படுத்துமெனவும் இதனால் தோட்டப்புறத்தை அண்டிய மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாவதோடு பாடசாலை மாணவர்கள் மதுபாவனைக்கு அடிமையாகும் சூழல் ஏற்படுமெனவும் தோட்டப்புறங்களில் வன்முறைகள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுமெனவும் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துமெனவும் தெரிவித்தார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் மத்திய குழு நிர்வாக சபை உறுப்பினர் கலாநிதி சிவப்பிரகாசத்திடம் ஜனாதிபதிக்கான மகஜரொன்றும் அவ்விடத்தில் கையளிக்கப்பட்டது. ஊர்வலத்துக்கு அச்சுறுத்தல்கள் இருந்தபோதும் பொலிஸாரின் முன்னிலையில் அமைதியான முறையில் இப்போராட்டத்தை முன்னெடுத்ததாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்தார்கள். 100க்கும் அதிகமான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

மதத் தலைவர்கள் பலரும் மதுபானசாலை திறப்பதற்கான தமது எதிர்க் கருத்துகளைத் தெரிவித்தனர். பன்விலை நகரில் ஏற்கனவே மதுபானசாலை திறப்பதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் இம்முயற்சி கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீண்டகால பாவனையின் பின்னரான சீ.டி.ஸ்கேனர் இயந்திரத்துக்குப் பிரியாவிடை





ஜே.எம்.ஹாபீஸ்

கண்டி தேசிய வைத்தியசாலையில் கடந்த 18 வருடங்களாக இலட்சக்கணக்கான நோயாளர்களது உடலியல் குறைபாடுகளைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்பட்டதும் ஆயிரக்கணக்கான வைத்திய மாணவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கு உதவிய சீ.டி.ஸ்கேனர் இயந்திரத்துக்கு சம்பந்தப்பட்டவர்களால் பிரியாவிடை வைபவமொன்று நடத்தப்பட்டது.

கண்டி தேசிய வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த இயந்திரத்துக்கு பிரியாவிடை வழங்கும் வைபவத்துக்கு அதில் கடமையாற்றி இயக்கி ஓய்வுபெற்றவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் மிகவும் கவலை தோய்ந்த நிலையில், மலர்ச்செண்டு வைத்து தமது கவலையைத் தெரிவித்தனர். அந்த அளவுக்கு மேற்படி சீ.டி.ஸ்கேன் இயந்திரம் மூலம் பலர் நன்மையடைந்ததை நினைவுகூரும் வகையிலேயே வைத்தியசாலை நிர்வாகத்தால் இவ்வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி இயந்திரம் 2006ஆம் ஆண்டு வைத்தியசாலையில் பொருத்தப்பட்ட இதுகாலவரை அது தனது சேவையை வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. 18 வருடங்களுக்கு முன்னர் இலங்கை நாணயப்படி 80 இலட்சம் ரூபாவுக்கு இது கொள்வனவு செய்யப்பட்டதாகவும் நாடளாவிய ரீதியில் பல நோயாளர்கள் கண்டிக்கு அழைத்துவரப்பட்டு இதனூடாக பயன்பெற்றதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

தற்போது அதனைத் தொடர்ந்து பாவிக்க முடியாது பாவனையிலிருந்து ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வைபவத்தில் கண்டி வைத்தியசாலையின் கதிரியக்கப் பிரிவு விசேட வைத்தியர் கங்காநாத் ரொட்ரிகோவும் கருத்து வழங்கினார்.

கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் இரேசா பெர்னாண்டோ உரையாற்றும்போது,

இதனை விட நவீனத்துவம் கொண்ட மற்றும் ஒரு சீ.டீ.ஸ்கேன் இயந்திரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார். 2019ஆம் ஆண்டு முதல் கண்டி தேசிய வைத்தியசாலையில் இரண்டு சீ.டீ.ஸ்கேன் இயந்திரங்கள் இயங்கியதாகவும் தற்போது ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளதால் தொடர்ந்து மற்ற ஒன்றை மட்டுமே பயன்படுத்த முடியுமென்றும் தெரிவித்த அவர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றுமொரு இயந்திரம் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளதாகவும் அதனைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தேர்தல் காலத்தில் மட்டும் மக்களை தேடிவரும் பருவகால பறவைகளல்லர் நாம்!

## செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன்

எஸ்.கணேசன்



''தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களைத் தேடிவரும் பருவகால பறவைகள் நாம் அல்லர். வென்றாலும் சரி, பின்னடைவைச் சந்தித்தாலும் சரி மக்களுடன்தான் இருக்கின்றோம். மக்களுக்கான எமது பயணம் தொடரும்'' - என்று அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் பொதுச்செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் காரியாலயம் ஹட்டன் சக்தி மண்டபத்தில் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அனுஷா மேலும் கூறியதாவது,

''பொதுத் தேர்தலென்பது அநுர சுனாமியென்றே கூறவேண்டும். அந்தச் சுனாமியில் பிரதான கட்சிகளெல்லாம் அள்ளுண்டுச் சென்றன. பல வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களும் காணாமலாக்கச்செய்யப்பட்டனர். அப்படியிருந்தும், நுவரெலியா மாவட்டத்தில் எனக்கு 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் அளிக்கப்பட்டன. சொற்ப அளவான வாக்குகள் வித்தியாசத்திலேயே பாராளுமன்ற ஆசனம் கைநழுவிப் போனது.

இதனை நான் தோல்வியாகக் கருதவில்லை. தற்காலிக பின்னடைவு மாத்திரமே. எனது தந்தை மீதுள்ள மதிப்பால் என்னையும் நம்பி வாக்களித்த மக்களுக்கு மிக்க நன்றி. என்னோடு தோளோடு தோளாக நின்று செயற்பட்ட தந்தையின் நண்பர்கள், தோழர்கள், செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், ஆதரவாளர்கள் என அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

அதேபோல, வதந்திகளைப் பரப்பி எமக்கான வாக்குகளைக் குறைப்பதற்கான சதிகளும் முன்னெடுக்கப்பட்டன. நிச்சயம் தற்போது உண்மை என்னவென்பது அவர்களுக்குத் தெரியவந்திருக்கும். எனது தந்தை மக்களுக்காக மக்கள் அரசியலை முன்னெடுத்த தலைவர். சலுகைகளுக்காக மக்களை அடகுவைத்தது கிடையாது. எனவே, நாம் தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களைத் தேடி வரமாட்டோம். தேர்தல் முடிந்த பிறகு ஓடிவிடவும் மாட்டோம். வென்றாலும் சரி, பின்னடைவைச் சந்தித்தாலும் சரி மக்களுக்காக அரசியல் செய்வோம். அது மக்கள் நல அரசியலாகவே இருக்கும்'' - என்றார்.

# இரத்தினபுரி பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவராக பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நியமனம்

(பு.கஜிந்தன்)



இரத்தினபுரி மாவட்ட கொடகவெல பிரதேச செயலகப் பிரிவின் கொடகவெல, ஓபநாயக்க, வெலிகபொல பிரதேசங்களை உள்ளடக்கிய பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நியமிக்கப்பட்டுள்ளார்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக ஒரு இலட்சத்து 12ஆயிரத்து 711 விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவாகிய சுந்தரலிங்கம் பிரதீப், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராகவும் பதவி ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், மேலும் மக்களுக்கான பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கு ஓர் உயரிய அங்கீகாரத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வழங்கியுள்ளார்.

இந்நியமனத்தைப் பெற்றுக்கொண்ட இரத்தினபுரி மாவட்டத்தின் முதலாவது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான நியமனக் கடிதம் அண்மையில் வழங்கி வைக்கப்பட்ட நிலையில், குறித்த பிரதி அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினர் மக்கள் சேவையை 'மாற்றான் தாய் மனப்பான்மையோடு' மேற்கொண்டனர். இனிவரும் காலங்களில் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளின் அடிப்படையில் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்புடையதாக பிரதேச மட்டத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சகல அபிவிருத்திப் பணிகளையும் ஒருங்கிணைப்பு செய்வதோடு, அவற்றைப் பின்தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் வழிவகைகளை மேற்கொள்வதோடு சகல மக்களுக்கும் இன, மத, மொழி, பிரதேசவாதங்கள் கடந்து மேற்கொள்வேன்" - எனத் தெரிவித்தார்.

# மத்திய சுற்றாடல் அதிகார சபையுடனான நிபந்தனைகளை மீறியதால் மேல் கதுருகல்தொல நீர்மின் திட்ட நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தம்





(இரத்தினபுரி நிருபர்)

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய மேல் கதுருகல்தொல நீர்மின் திட்டத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபை இடைநிறுத்தியுள்ளது.

இரத்தினபுரி வேவல்வத்தை மேல் கதுருகல்தொல நீர்மின் திட்டத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபை இடை நிறுத்தியுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தெரிவித்தார்.

மேல் கதுருகல்தொல சுதர்ஷனாராம விகாரையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த மாகாண ஆளுநர்,

''மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 2024.12.06 திகதி இடப்பட்டுள்ள 14/1/540/2024 கொண்ட கடிதத்தின் பிரகாரம் மேற்படி நீர்மின் திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேற்படி திட்டம் ஒரு தனியார் நிறுவனத்தின் (எஸ்.என்.ஹய்டோ பவர் பிரைவேட் லிமிட்டெட்) மூலம் 02 மெகாவோட் நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நோக்குடன் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2024.12.06 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தனியார் நிறுவனத்தின் (எஸ்.என்.ஹய்டோ பவர் பிரைவேட் லிமிட்டெட்) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் மேற்கொண்ட நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்படி மேல் கதுருகல்தொல நீர்மின் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது குறித்து நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை அமைதியான முறையில் செயற்படுமாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன மேலும் தெரிவித்தார்.

பாடியோயெகி பாடி நீர் வீழ்ச்சியின் கீழ் அனைகட்டி பென்ஸ்டாக் குழாய் மூலம் 790 மீற்றர் நீரைக் கொண்டுசென்று இரத்தினபுரி வேவல்வத்தை, கதுருகல்தொல பகுதியின் பாலத்தின் அருகில் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு 02 மெகாவோட் மின்சாரத்தை தேசிய அமைப்புக்கு சேர்த்துத் கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது.

மேற்படி மேல் கதுருகல்தொல நீர்மின் திட்டத்துக்கு பம்ரபொட்டுவ சுற்றாடல் பாதுகாப்பு ஒன்றியம் மற்றும் பல்வேறு சுற்றாடல் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வருவதுடன், பாடிய ஓய நீர் வீழ்ச்சி, மதனகிரி நீர் வீழ்ச்சி மற்றும் 05 மீற்றருக்கு குறைவான 10 நீர்வீழ்ச்சிகள் இந்த நீர்மின் திட்டத்தினால் முற்றாக அழிந்துவிடும்.

மேற்படி நீர்மின்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த சில வருடங்களாக பிரதேச மக்கள் பல்வேறு போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வந்தனர்.

இது சம்பந்தமாக தேசிய மக்கள் சக்தியில் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார கடந்த 06ஆம் திகதி பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அனர்த்தத்தில் உயிரிழந்த மத்ரஸா மாணவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை வக்பு சபையால் நிதியுதவி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திய மாவடிப்பள்ளி வெள்ளத்தில் சிக்கி மரணமடைந்த மத்ரஸா மாணவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை வக்பு சபை மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து முஸ்லிம் தரும நம்பிக்கை நிதியத்திலிருந்து (MCF) தலா ஒரு இலட்சம் ரூபாவீதம் வழங்கின.



மாவடிப்பள்ளி விபத்தில் உயிரிழந்த மத்ரஸா மாணவர்களின் மரணமானது முழு நாட்டு மக்களையுமே மீளாத்துயரில் ஆழ்த்தியது.

இவ்வாறான இள வயது மரணங்கள் என்பது பெற்றோரையும் உறவினர்களையும் மிகவும் கவலைக்குட்படுத்தக்கூடிய விடயமாக மாறியுள்ளதால் அவர்களுக்கு இவ்விழப்பின் வலியைத் தாங்குகின்ற மனத் தைரியத்தை இறைவன் கொடுக்க வேண்டுமென்றும் உயிரிழந்த அனைவருக்கும் ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவனம் கிடைக்கவேண்டுமென்றும் அதற்காக பிரார்த்தனை செய்யுமாறும் திணைக்களம் வேண்டிக்கொள்கின்றது.

அத்தோடு, இவ்விபத்தில் பாதிக்கப்பட்டு மரணமடைந்த 6 மத்ரஸா மாணவர்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.நவாஸின் பரிந்துரையில் இலங்கை வக்பு சபையும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து மரணமடைந்த மத்ரஸா மாணவர்களின் பெற்றோர்களிடம் காசோலைகளாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (08) வழங்கி வைத்தன.

இதனை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தினூடாக வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# இபலோகம பகுதியில் நபரொருவர் சடலமாக மீட்பு

(ஏ.பிர்தௌஸ்)

இபலோகம, வளவேகம பிரதேசத்தில் 37 வயதுடைய நபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் வளவேகமவிலுள்ள அவரது வீட்டினுள் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட நபர் நேற்று முன்தினம் இரவு வேறொருவருடன் சேர்ந்து மது அருந்தியதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை இபலோகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பொலிஸாரை இரு வருடங்களாகத் திணறடித்த திருடன்; 24 கொள்ளைச் சம்பவங்கள் குறித்து வாக்குமூலம்

(பு.கஜிந்தன்)

யாழில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கைதான சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 24 கொள்ளைச் சம்பவங்கள் குறித்து வாக்குமூலம் பெறப்பட்டது.

300 தங்கப் பவுனுக்கும் மேற்பட்ட நகையையும் சுமார் 60 இலட்சம் ரூபா பணத்தையும் திருடிய திருடனைக் கைதுசெய்துள்ளதாக யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜருள் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்று (09) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம் மற்றும் மானிப்பாய் போன்ற பொலிஸ் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 2022ஆம் ஆண்டிலிருந்து வீடுகளை உடைத்து நகை மற்றும் பணத்தைத் திருடிச் செல்லும் திருடன் குறித்து நாங்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்தோம்.

இது தொடர்பான தகவல்களைத் திரட்டி குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்வதற்காக



வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக்சீய தனபால மற்றும் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜயசிங்க ஆகியோர் எனது தலைமையிலான குழு ஒன்றை நியமித்தனர்.

அந்தவகையில், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் யாழ். பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வு அதிகாரிகளை நியமித்து இந்தத் திருட்டுச் சம்பவங்கள் குறித்து கணினி மூலமான வரைபடத்தைத் தயாரித்து அது தொடர்பாக விசாரணை செய்து குறித்த திருடனை கொழும்பில் கைதுசெய்தோம்.

2022ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சுமார் 35க்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து திருடியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் இருவருடன் இணைந்து திருடிவந்த இவர், பின்னர் தனியாக துவிச்சக்கர வண்டியில் சென்று திருட்டுகளை மேற்கொண்டு வந்துள்ளார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து திருட்டுகளை மேற்கொண்டுவிட்டு அந்த நகைகளை கொழும்பில் விற்பனை செய்து வந்துள்ளார். அந்தவகையில், அவருடன் மேலும் மூன்று சந்தேகநபர்களையும் கைதுசெய்து தடுப்பில் வைத்திருக்கின்றோம்.

இதுவரை யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட 12 திருட்டுச் சம்பவங்கள் குறித்தும் கோப்பாய் பொலிஸ் பிரிவில் 10க்கு மேற்பட்ட களவுகள் குறித்தும் தகவல் தந்துள்ளார். இறுதியாக மேற்கொண்ட இரண்டு திருட்டுகளும் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இவரால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட களவுகளின் அடிப்படையில் ரூ.66 மில்லியன் பெறுமதியான உடைமைகளைத் திருடியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனவே, யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற மக்கள் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறும் போது, திருட்டுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை எமக்கு சரியாக வழங்கும் பட்சத்தில் எங்களால் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க முடியும்''- என்றார்.

# கசிப்பு - கஞ்சாவுடன் மூளாயில் இருவர் கைது!

(பு.கஜிந்தன்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் வேரம் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் 24 வயதுடைய சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, 3 கிராம் கஞ்சாவுடன் 22 வயது சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த இளைஞரிடம் வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது அவரிடம் கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





78 th Colombo Zulu சாரணர் மாணவர்களுக்கான தங்க நட்சத்திர விருது வழங்கும் நிகழ்வு தெமட்டகொடை கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் ஷாம் ரிபாய் ஹாஜியார் அரங்கில் நேற்றுமுன்தினம் (08) நடைபெற்றது. இதன்போது சாரணர் பாத்திமா றாயிதா பதக்கத்தையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (09.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 181.1299 | 190.5110 |
| கனேடியன் டொலர் | 200.8367 | 209.5318 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.4994 | 41.0603 |
| யூரோ | 300.0925 | 312.6562 |
| ஜப்பான் யென் | 1.8996 | 1.9760 |
| சிங்கப்பூர் டொலர் | 211.4054 | 221.2888 |
| ஸ்ரேலிங் பவுன் | 362.9192 | 376.9306 |
| சுவிஸ் பிராங் | 322.3980 | 338.1011 |
| ஐ.அ. டொலர் | 286.1018 | 294.7043 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 769.9324 |
| குவைட் | குவைட் தினார் | 944.6608 |
| ஓமான் | ஓமான் றியால் | 754.1338 |
| கட்டார் | கட்டார் றியால் | 79.6438 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.2801 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.0475 |

# சொத்தைக் கோரி தாயையும் 13 வயது சிறுவனையும் தாக்கிய நபர் கைது!

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி பகுதியில் தாயையும் அவரது 13 வயது மகனையும் கொடூரமாகத் தாக்கிய நபரொருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் நேற்று (09) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைவாக இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கணவனைப் பிரிந்த குறித்த தாயும் மகனும் தனியாக வசித்து வந்துள்ளனர். இதன்போது பளை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் அராலி பகுதியிலுள்ள அவரது சகோதரி வீட்டுக்குச் சென்றிருந்தபோது அவருக்கும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்குமிடையே தொடர்பு ஏற்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட குறித்த பெண்ணின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

அங்கு தங்கியிருந்த சில மாதங்களின் பின்னர் அந்த வீட்டைத் தனது பெயருக்கு எழுதித் தருமாறு கூறி குறித்த பெண் மீதும் குறித்த பெண்ணின் மகன் மீதும் தாக்குதல் நடத்தி வந்துள்ளார். அதனால் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அவரது தாக்குதலினால் அந்தப் பெண்ணுக்கு தலையில் பாதிப்பு ஏற்பட்டு மனநலக்குறைவு ஏற்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய சந்தேகநபர் தனது தாக்குதல் மூலமே அந்தப் பெண்ணுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதாக அயல்வீட்டாருக்கு கூறியுள்ளார்.

அதன்பின்னர் அந்தப் பெண் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவேளை, சிறுவன் மீதும் தாக்குதல் நடத்தி சிறுவனை வீட்டைவிட்டுத் துரத்தியுள்ளார். இந்நிலையில், குறித்த சிறுவன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்தவேளை, அந்தச் சிறுவனை மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இதன்போது, அந்தச் சிறுவனை சிறுவர் இல்லத்தில் சேர்ப்பிக்குமாறும் சந்தேகநபரைக் கைதுசெய்யுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்தவகையில், பளை பகுதியில் தலைமறைவாகியிருந்த குறித்த நபர் மீண்டும் அராலி பகுதிக்குச் சென்றிருந்தவேளை வட்டுக்கோட்டை பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின்போது அவர் ஐந்துக்கும் மேற்பட்ட திருமணங்கள் செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவடிப்பள்ளி அனர்த்தத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கான சர்வமதப் பிரார்த்தனை



(பாறுக் ஷிஹான்)

மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கான சர்வமத ஆத்மசாந்தி பிரார்த்தனை காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய முச்சந்தியில் தலைவர் சிவஸ்ரீ க.வி.பிரமீன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(08) மாலை நடைபெற்றது.

கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் சர்வமத குருமார்கள், அம்பாறை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவர்தன, மேலதிக அரசாங்க அதிபர் சிவ ஜெகராஜன், கல்முனை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன், திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல்-ஜவாஹிர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஜெயராஜ், முன்னாள் அரசாங்க அதிபர்கள், காரைதீவு பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரி உபுல் சானக், ஆலய பரிபாலன சபையினர், இந்து மாமன்ற உறுப்பினர்கள், உலமா சபையின் நிர்வாகிகள், இராவணா அமைப்பினர், உயிர் நீத்த உறவுகளின் பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அதிதிகள் உரையைத் தொடர்ந்து அனைவரும் இணைந்து அகல் விளக்குகளில் தீபச்சுடரேற்றி அனர்த்தத்தின்போது உயிர்நீத்த உறவுகளின் ஆத்மா சாந்தியடையவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறாமல் பாதுகாக்கவும் பிரார்த்தனைகள் இடம்பெற்றதோடு, உயிர்களைக் காக்க களப்பணி செய்த வீரர்களும் நினைவுகூரப்பட்டனர்.

# சாரணர் விருது வழங்கி கௌரவிப்பு





(கோணாவத்தை, சீனக்குடா செய்தியாளர்கள்)

தேசிய சாரணர் விருது வழங்கும் நிகழ்வு இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்பிரித் பெர்னாண்டோ தலைமையில் சனிக்கிழமை (07) அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்குப் பிரதமர் ஹரிணி அமரசூரிய பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது சாரணியத்துறைக்கு ஆற்றிய பணியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட சாரணத் தலைவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் பிரதமர், பிரதமரின் செயலாளர் ஆகியோரால் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில், நீண்டகாலமாக சாரணியத்தில் சேவையாற்றிய ஊடகவியலாளரும் உதவி மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.எவ்.றிபாஸ் தேசிய சாரணர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை, இலங்கை சாரணர் இயக்கத்தில் இணைந்து 32 வருடங்கள் சேவையாற்றியமைக்காக திருகோணமலை மாவட்ட சாரணர் ஆணையாளர் சிங்காரவேலு சசிகுமார் வெள்ளித்தாமரை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், பல்வேறு மாவட்டங்களிலிருந்து மாவட்ட சாரண ஆணையாளர்கள், உதவி சாரண ஆணையாளர்கள் மற்றும் சாரணத் தலைவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# வெள்ளைப்பட்டி தினத்தை முன்னிட்டு கிண்ணியாவில் விழிப்புணர்வு ஊர்வலம்









(சீனக்குடா செய்தியாளர்)

வெள்ளைப்பட்டி (White Ribbon Day) தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு ஊர்வலமொன்று திருகோணமலை, கிண்ணியாவில் நேற்று திங்கட்கிழமை (09) இடம்பெற்றது.

இதனை திருகோணமலை பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

கிண்ணியா பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி, பிரதான வீதி வழியாகச் சென்று, மீண்டும் பஸ்தரிப்பு நிலையத்தை வந்தடைந்தது.

2030ஆம் ஆண்டுக்குள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் மற்றும் பொறுப்புக்கூறலை கோருவதற்கும் உலகளாவிய முயற்சிகளில் ஐ.நா. பெண்கள் அமைப்போடு நாங்களும் இணைகின்றோமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் இளைஞர்களும் யுவதிகளும் வெள்ளைப்பட்டி அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. திருகோணமலை மாவட்டத்தின் பெண்கள் வலையமைப்பின் தலைவர் சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமார் ஊடகங்களுக்கும் கருத்துத் தெரிவித்தார்.

# வெள்ள அனர்த்தத்தின்போது களப்பணியாற்றியோர் கௌரவிப்பு





(மாளிகைக்காடு செய்தியாளர்)


மாவடிப்பள்ளி பிரதேச வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்ட 13 பேரை மீட்கும் பணியில் களப்பணியாற்றிய மீட்புப் பணியாளர்களைப் பாதிக்கப்பட்ட சம்மாந்துறை மக்கள் சார்பில் பாராட்டி நன்றிகூறும் நிகழ்வு சம்மாந்துறை பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர்கள் சபையின் ஏற்பாட்டில் சம்மாந்துறை திராஸதுல் இஸ்லாமியா மகளிர் அறபுக் கல்லூரியில் சனிக்கிழமை (07) நடைபெற்றது.

இதன்போது மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு மற்றும் அவர்களுக்குப் பக்கபலமாக உழைத்த சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை, காரைதீவு இராவணா அமைப்பு, கல்முனை மட்டுப்படுத்தப்பட்ட ஆழ்கடல் மீனவச் சுழியோடிகள், நீரியல்வள கூட்டுறவுச் சங்கத்தினர் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரை சம்மாந்துறை பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர்கள் சபையுடன் இணைந்து அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை சம்மாந்துறை கிளை, மஜ்லிஸ் அஸ்-சூரா உள்ளடங்கலாக சம்மாந்துறை பொது நிறுவனங்கள் கூடி கௌரவித்தது.

வவுனியா முன்னாள் அரசாங்க அதிபரும் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவருமான ஐ.எம்.ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நிந்தவூர் மாட்டுப்பள்ளை பாலத்தில் சீரான போக்குவரத்து

## கனரக வாகனங்கள் செல்ல அனுமதி அரசாங்க அதிபரும் நேரில் விஜயம்



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் நிந்தவூர் பிரதான வீதி மாட்டுப்பள்ளை பாலம் உடைந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்ததுடன் இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வந்தனர்.

இந்நிலையில், கடந்த வாரம் விஜயம் செய்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ரி.பாஸ்கரனின் அறிவுறுத்தலுக்கமைய, குறித்த பாலத்தைப் புனரமைக்கும் பணிகள் அக்கரைப்பற்று மேலதிக மாகாணப் பணிப்பாளர் காரியாலயத்தின் மாகாண பணிப்பாளர் எம்.பி.அலியாரின் விசேட கண்காணிப்பின் கீழ், இரு வாரங்களாக இடம்பெற்று வந்திருந்தது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை(08) குறித்த பகுதிக்கு விஜயம் செய்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, நிலைமைகளைப் பார்வையிட்டார். இதன்போது, இப்பாலத்தினூடாக கடந்த வாரமாக போக்குவரத்து முறைகள் பற்றி மாகாணப் பணிப்பாளரால் அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்ததுடன், கனரக வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த விடயத்தையும் சுட்டிக்காட்டினார்.

தற்பொழுது மாற்றுவழிப்பாதை பாலமாக (இரும்புப் பாலம்) அமைக்கப்பட்டு, திங்கட்கிழமை (09) முதல் சீரான போக்குவரத்து இடம்பெறவுள்ளதாகவும் கடந்த வாரங்களாக கனரக வாகனங்கள் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் கனரக வாகனங்கள் இப்பாலத்தினூடாக பயணிக்க முடியும் எனவும் மாகாண பணிப்பாளர் எம்.பி.அலியார் தெரிவித்தார்.

அத்தோடு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் இப்பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு இடம்பெற்ற பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன், வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட ஒலுவில் களியோடை பாலத்தை அண்டிய பிரதேசங்களையும் ஒலுவில் களியோடைப் பாலத்தின் கீழ்ப் பகுதிகளில் தேங்கி கிடக்கும் மண்ணினால் ஏற்படும் பாதிப்புகளையும் பார்வையிட்டார்.

இந்த விஜயத்தில் பிரதம பொறியியலாளர் ரி.சிவசுப்ரமணியம், கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் இஷட்.ஏ.எம்.அஸ்மீர் உள்ளிட்ட அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



திருகோணமலை மாவட்ட அனைத்து மத்தியஸ்த சபைகளின் பங்குபற்றுதலுடன் 34ஆவது தேசிய மத்தியஸ்த தின நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் வெள்ளிக்கிழமை (06) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மத்தியஸ்த சபை பயிற்றுனர் அதிகாரி வீ.சவரிநாயகம், திருகோணமலை மாவட்ட காணி (விசேட) மத்தியஸ்த சபை தவிசாளர் எழிலரசி ,மாவட்ட சமூக மத்தியஸ்த சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உதவித் தவிசாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (தோப்பூர் செய்தியாளர்)



வெருகல் பிரதேச செயலகத்துக்குட்பட்ட குறைந்த வருமானம் பெறும் முதியோருக்கு திரிய பியச முதியோருக்கான வீடமைப்புத் திட்டத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை(06) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.இர்பானின் ஏற்பாட்டில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் முன்னிலையில் ரூபா ஏழு இலட்சம் பெறுமதியான காசோலையை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி வெருகல் பிரதேச செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் வழங்கினார். (தம்பலகாமம் செய்தியாளர்)

# 'நிலைபேறான அபிவிருத்தி' விழிப்புணர்வு நிகழ்வு



(மீராவோடை செய்தியாளர்)

கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் 2ஆம் வருட மாணவர்கள் தங்களின் அரையாண்டின் சூழலியல் சட்டம் எனும் பாடத்தின் தொடர் மதிப்பீட்டின் பொருட்டு 'நிலைபேறான அபிவிருத்தி' எனும் தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்வொன்றை வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் வியாழக்கிழமை (04) நடத்தினர்.

பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முதலாம், இரண்டாம் வருட உயர்தரப் பிரிவு மாணவிகள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் நிலைபேறான அபிவிருத்தி என்பதன் விளக்கம், தோற்றம், நோக்கம், அமுலாக்கம், அண்மைக்காலப் போக்குகள், நிலைபேண் அபிவிருத்திக்கு மாணவர்களின் பங்களிப்பு போன்ற தலைப்புகளில் கலந்துரையாடப்பட்டதுடன் தமக்கு ஏற்பட்ட சந்தேகங்களையும் கேட்டு தெளிவு பெற்றுக் கொண்டனர்.

இதில், பாடசாலை பிரதி அதிபர் திருமதி ஜெஸீமா ஐயூப், உயர்தரப் பிரிவு பகுதித் தலைவர் எஸ்.பாரூக், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர். விழிப்புணர்வு நிகழ்வின் இறுதி அம்சமாக பல்கலைக்கழக மாணவிகளால் பாடசாலைக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

# சுற்றுலாப் பயணிகளிடம் பணம், நகை கொள்ளையிட்ட சந்தேகநபர் கைது

(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் நகைகள் மற்றும் பணம் கொள்ளையிட்ட சந்தேக நபர் ஒருவரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ்.ஏ. ரஹீம் தெரிவித்தார்.

காலி, ஜின்தோட்டையைச் சேர்ந்த 30 பேர் கொண்ட சுற்றுலாக் குழுவினர் காத்தான்குடி சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்தபோது சுற்றுலா விடுதியின் மதில் மேலால் உள்ளே நுழைந்து சுற்றுலாப் பயணிகளின் கைப்பையிலிருந்து பணம் மற்றும் அவர்களிடமிருந்த நகைகளைக் கொள்ளையிட்ட நபர் ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

37 ஆயிரத்து 500 ரூபா மற்றும் 15,000 ஆயிரம் ரூபா என இருவரிடம் பணத்தையும் மேலும் சிலரிடம் நகைகளையும் கொள்ளையிட்டதுடன் மேலும் பலரிடம் அவர்கள் அணிந்திருந்த நகைகளையும் கொள்ளையிட்டு, நகைகளை வாழைச்சேனையிலுள்ள நகைக்கடையில் விற்பனை செய்துள்ளதுடன் விற்பனை செய்த பணம் மற்றும் கொள்ளையிட்ட பணம் ஆகியவற்றுக்கு சந்தேகநபர் ஐஸ் போதைப்பொருளை வாங்கி பாவித்துள்ளமை தெரிய வந்துள்ளது.

மீதமாயிருந்த இரு தங்க நகைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர். 43 வயதுடைய போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான நபரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதுடன், காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மத்தியமுகாமில் வெளிநோயாளர் பிரிவு திறப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

மத்தியமுகாம் பிரதேச வைத்தியசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வெளிநோயாளர் பிரிவு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஷஹீலா இஸ்ஸதீனால் சனிக்கிழமை(07) திறந்து வைக்கப்பட்டதுடன், வைத்தியசாலைக்கு தேவையான தளபாடங்களும் வழங்கப்பட்டன.

பிரதேச வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.சாபி ஆகியோர் விசேட அதிதிகளாக பங்குபற்றியதுடன், விசேட உரைகளையும் நிகழ்த்தினர்.

இதன்போது பற்சிகிச்சைப் பிரிவின் வேலைத் திட்டங்களை விரைவுபடுத்துவது தொடர்பில் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்க குழுவினருடன் விரிவாக ஆராயப்பட்டதுடன், வைத்தியசாலையின் ஏனைய தேவைகள் மற்றும் நோயாளர்களுக்கான சேவையை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பிலும் இந்நிகழ்வின் போது கலந்துரையாடப்பட்டது.

# மாவடிப்பள்ளி வீதி மருங்கில் தடுப்புச்சுவர் நிர்மாணிப்பு



(பாறுக் ஷிஹான்)

வெள்ள அனர்த்தம் இடம்பெற்று மத்ரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் உயிரிழந்த சம்பவத்தின் எதிரொலியாக அப்பகுதி வீதியின் மருங்கில் தற்போது தூண்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

குறித்த தூண்கள் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி சின்னப்பாலம் வீதிகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்துக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் உட்பட ஏனைய தரப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்கிவருகின்ற அதேவேளை, எதிர்காலத்தில் இப்பகுதியில் ஏற்படும் வெள்ள நிலைமையின் அளவீட்டை இலகுவாகக் கணிப்பீடு செய்வதற்காகவும் அவ்வழியாக பயணம் செய்யும் பொதுமக்கள் வாகனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் இத்தூண்கள் நிர்மாணிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 06 அடி உயரத்தில் இத்தூண்கள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்சிகளின் எண்ணிக்கை முக்கியமல்ல: கிடைக்கும் வாக்குப் பலமே முக்கியம்!

## தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சிறிநேசன் எம்.பி.

**(கனகராசா சரவணன்)**

''தமிழரசுக் கட்சி ஒரேயொரு கட்சியாக செயற்பட்டு 08 ஆசனங்களைப் பெற்றுள்ளது. எனவே, 07 கட்சிகளுடன் 8ஆவது கட்சியாக தமிழரசுக் கட்சியை இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கருத்தை ஏற்கமுடியாது. 07 கட்சிகளாக செயற்பட்டிருந்தும் கூட ஓர் ஆசனத்தை மட்டுமே அவர்கள் கைப்பற்றியுள்ளனர். எனவே, கட்சிகளின் எண்ணிக்கை முக்கியமானதல்ல, கட்சிகளுக்கு கிடைக்கப்பெறுகின்ற வாக்குப்பலம்தான் முக்கியமானது. விடாகண்டன் கொடாகண்டனாக இல்லாமல் சரியாக சிந்திக்கவேண்டும்'' - என தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை (08) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சி ஒற்றுமையை விரும்புகின்ற கட்சி. கடந்த காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாங்கள் பிரிந்து செயற்படுகின்றோமென்ற விடயத்தைச் சொல்லியிருந்தோம். மாகாண சபை மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் இணைந்து செயற்படுவோமென்ற கருத்தைத் தெரிவித்திருந்தோம். ஆனால், அதற்குள் அவர்கள் அவசரப்பட்டுக் கொண்டு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியொன்றை உருவாக்கி நாங்கள் 07 கட்சிகள் ஒன்றாகிவிட்டோம். நீங்கள் ஒரு கட்சியாக இருப்பதால் எங்களுடன் வந்து இணையுங்களென நிபந்தனைகளை விதித்தனர்.

இதன்போது நாங்கள் அப்படியல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயற்படலாமென கருத்து சொன்னபோதும் அவர்கள் இல்லை, எங்களுடன் 07 கட்சிகள் இணைந்துள்ளன. எனவே, 07 கட்சிகளுடன் ஒரு கட்சிதான் வந்து இணையவேண்டுமென்ற கருத்தை முன்வைத்திருந்தனர். உண்மையில், தேர்தல் முடிந்த பின்னர் விளங்குகின்ற விளக்கம் என்னவென்றால், 07 கட்சிகளாக செயற்பட்டிருந்தால் கூட அவர்களால் ஓர் ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடிந்திருக்கும். ஆனால், ஒரேயொரு கட்சியாக செயற்பட்டிருந்த தமிழரசுக் கட்சி 08 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆகவே, கட்சிகளின் எண்ணிக்கை முக்கியமானதல்ல, கட்சிகளுக்குக் கிடைக்கப்பெறுகின்ற வாக்குப்பலம்தான் முக்கியமானது.

அந்த அடிப்படையில் அவர்கள் இந்த விடயத்தைத் தெளிவாக உணர்ந்திருப் பார்கள். இனிவரும் காலங்களில் எமது கட்சி கூடி தெளிவானதொரு முடிவெடுக்கும். அந்த முடிவை அறிவிப்பேன். அதேவேளை, நிபந்தனைகள் விதிப்பது 07 கட்சியுடன் 08ஆவது கட்சியாக இணைத்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ள முடியாது. வாக்குப்பலத்தின் அடிப்படையில் எந்தக் கட்சியோடு எந்தக் கட்சி இணைய வேண்டுமென சிந்திக்கவேண்டும். அதேவேளை, சிவஞானம் சிறீதரன் தலைமையில் 08 பேர் சென்று ஜனாதிபதியைச் சந்தித்தோம். அதன்போது தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அடிப்படையில் தீர்வைத் தரவேண்டும். காணிகள் விடுவிப்பு, அதாவது, பலதரப்பட்ட காணிகள் இராணுவத்தினராலும் குடியேறிகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் அதில் மட்டக்களப்பு, மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை காணி, நீதிமன்ற தடையையும் மீறி ஆக்கிரமிக்கப்படுவதாகவும் அதனால் 05 இலட்சம் கால்நடைகள் மேய்ச்சல்தரை இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தோம்.

அத்துடன், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும். நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக இருக்கும் அப்பாவி கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும். காணாமலாக்கப்பட்டவர்கள் பிரச்சினைக்கான தீர்வு, கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் அதேவேளை, திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி என்பன தொடர்பாகவும் எடுத்துரைத்தோம்.

இதேவேளை வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பின்தள்ளப்பட்டிருக்கின்ற பிரதேசங்கள் அபிவிருத்திசெய்யப்படவில்லை. அந்த அபிவிருத்தி விடயத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் இல்லாமல் எதிர்க்கட்சியில் இருக்கின்ற தமிழரசுக் கட்சிக்கும் விசேடமான நிதியை ஒதுக்கவேண்டுமென கோரிக்கை முன்வைத்தோம். அதனை ஜனாதிபதி அமைதியாகவும் சிநேக பூர்வமாகவும் அவதானித்துப் பதில்களைத் தந்துள்ளார்.

அதேவேளை, இனப்பிரச்சினை தொடர்பாக புதிய அரசியல் யாப்பை ஏற்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தபோது நாங்கள் அந்த மாற்றத்தின்போது வடக்கு, கிழக்கு இணைந்திருக்க வேண்டும்.

சமஷ்டி முறையிலான தீர்வு தேவை என்றபோது அவர் அரசியல் யாப்புத் திருத்தம் வரும்போது கவனத்திற்கொள்வோமெனத் தெரிவித்தது மட்டுமல்லாது தென்னிலங்கையில் இருக்கின்ற மக்களும் இந்த விடயத்தில் குழப்பமடையாத விதத்தில் அந்தத் தீர்வைக் காணவேண்டும்.

அதேவேளை, ரில்வின் சில்வா 13ஐ நீக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.



ஆனால், ஜனாதிபதி வழக்கமாக இருக்கும் 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருக்கும் மாகாண சபை முறையில் எந்தவொரு அதிகாரமும் குறைக்கப்படவோ அதிகரிக்கப்படவோ முடியாது. எனவே, ரில்வின் சில்வா சொன்ன கருத்துக்கும் ஜனாதிபதி சொல்லும் கருத்துக்குமிடையிலான முரண்பாடு இருக்கின்றது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி சொல்லும் கருத்து உண்மையான கருத்தாகும்.

கடந்த காலத்தில் தென்னிலங்கைத் தலைவர்களால் இனப்பிரச்சினை மற்றும் தமிழர்களின் பல்வேறு பிரச்சினை தொடர்பாகவும் ஏமாற்றப்பட்டிருந்தோம். தென்னிலங்கைத் தலைவர்களின் செயற்பாடு நடக்கின்றபோதுதான் அவற்றை உண்மையான விடயங்களாகக் கருதமுடியும். கருத்துகளைக் கருத்துகளாக எடுத்துக்கொள்ள முடியும்.

இதேவேளை, பாராளுமன்ற அரசியல் பேரவையில் எமது பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியானது . கடந்த காலத்தில் 144 ஆசனத்துடன் இருந்த மொட்டுக்கட்சி 03 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. 03 ஆசனங்களுடன் இருந்த தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைப் பெற்றுள்ளது. இந்த மாற்றமென்பது தலைகீழான மாற்றமாகும். இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் முதலில் இடதுசாரி கட்சியான தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது'' - என்றார்.

# அடம்பிடி வட்டுவானில் 781 ஏக்கர் வேளாண்மை பாதிப்பு



**(கல்குடா செய்தியாளர்)**

வெள்ள அனர்த்தத்தால் வாழைச்சேனை கமநல சேவைப் பிரிவில் அடம்பிடி வட்டுவான் விவசாயக் கண்டத்தில் 781 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அடம்பிடி வட்டுவான் விவசாய கண்டத்தில் 916 ஏக்கர் வயல் நிலத்தில் 190 விவசாயிகள் விவசாயம் செய்து வருவதுடன், இதில் 781 ஏக்கர் விவசாய நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 159 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

''எங்களிடமிருக்கும் மொத்த பொருளாதாரத்தோடு மேலதிகமாக கடன்பட்டு விவசாயத்தை மேற் கொண்டு 45 நாட்கள் கடந்த நிலையில், திடீரென்று ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் எங்களது விவசாயம் முற்றாகப் பாதிக்கப் பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எங்களுக் கான நஷ்டஈட்டைப் பெற்றுத் தருவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறோம்'' - என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மலசலகூட குழி நிர்மாணத்தின்போது தவறி விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

## சாய்ந்தமருதில் சம்பவம்



**(பாறுக் ஷிஹான்)**

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட குழியில் தவறி விழுந்து ஸ்தலத்தில் உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் சடலம் விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதான வீதியில் கடைத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுவருகிறது

இந்நிலையில் அங்கு தொழிலில் ஈடுபட்ட ஒருவர் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட குழியில் தவறி விழுந்து உயிரிழந்ததுடன், மற்றுமொருவர் காயங்களுடன் மீட்கப்பட்டு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(08) மாலை இடம்பெற்றது. இந்நிலையில் சம்பவ இடத்துக்கு சென்ற கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் ஸ்தல விசாரணை மேற்கொண்டதுடன், கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிணங்க மரண விசாரணை அதிகாரியின் விசாரணையையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த உயிரிழப்பு மூச்சுத்திணறல் காரணமாக ஏற்பட்டதா அல்லது வேறு காரணமாக சம்பவித்துள்ளதா என்பதை கண்டறிய கொழும்பிலுள்ள பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு சடலத்தின் சில பகுதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவத்தில் 12 நாள் ஆண் குழந்தையொன்றின் தந்தையான சாய்ந்தமருது பிரிவு - 16, அஹமட் வீதியைச் சேர்ந்த அப்துல் மஜீட் மஹ்தி அஹாஸ் அஹமட் (வயது-29) என்பவரே உயிரிழந்தார்.

அத்துடன், உயிரிழந்த இளம் குடும்பஸ்தரைக் காப்பாற்றுவதற்காக உடனடியாகச் செயற்பட்ட மாவடிப்பள்ளி பகுதியைச் சேர்ந்த இஸ்மாயில் றிபான் (வயது-42) என்பவர் காயமடைந்து அபாயக் குரல் எழுப்பிய நிலையில் ஏனையோரால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும், குறித்த கடை கட்டுமான வேலைத்தளத்தில் மூவர் இருந்ததுடன், சாய்ந்தமருது பொலிஸாரின் புலன் விசாரணை மற்றும் அம்பாறையிலிருந்து வரவழைக்கப்பட்ட பொலிஸ் தடயவியல் (SOCO) பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிதிப்பிரமாண இயலளவை மேம்படுத்துவதற்கான செயலமர்வு





**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கான நிதிப்பிரமாண இயலளவை மேம்படுத்துவதற்கான செயலமர்வானது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(06) இடம்பெற்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிதிப்பிரமாணம் தொடர்பான தெளிவூட்டல்கள் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வினைத்திறனான சேவையை பெற்றுக்கொள்வதைக் கருத்திற்கொண்டு நிதிப்பிரமாணம் தொடர்பான விளக்கங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

மேலும், உத்தியோகத்தர்கள் நிதிப்பிரமாண்ண செயற்பாடுகளின்போது எதிர்கொள்ளும் சவால்களுக்கான தீர்வுகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இச்செயலமர்விவில், பொதுச் சம்பளம் தொடர்பான தெளிவூட்டல்களை பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் எஸ்.ஏ.சசிகரன் மற்றும் பொது நிதிப்பிரமாணம் எனும் தலைப்பிலான தெளிவூட்டல்களை கணக்காளர் திருமதி கே.சித்ரா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**மட்டக்களப்பில் இயங்கிவரும் ஐ.டி.எம். ஈஸ்ரன் கம்பெஸ் 6ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு, 'மனித உயிர் அரியது. அதைக் காக்கும் இரத்தம் பெரியது. இரத்ததானம் செய்வோம். உயிரைக் காப்போம்' எனும் தொனிப்பொருளிலான இரத்ததான நிகழ்வு சனிக்கிழமை (07) மட்டக்களப்பு பயினியர் வீதியிலுள்ள கம்பெஸ் கட்டிடத்தில் இடம்பெற்றது. கம்பெஸின் பணிப்பாளர் தே.சசிக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் , ஐ.டி.எம். ஊழியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.**

**(கனகராசா சரவணன்)**

## குமுறிக்கொண்டிருக்கும்...

ஏனெனில், அவர்கள் இராணுவமா எனத் தெரியவில்லை. ஏனெனில், கறுப்பு உடை அணிந்து கறுப்புத் துணியால் முகத்தை மூடியிருந்தார்கள். அவர்களது வாகனத்தை அவதானிக்கும் போது பல பெண் பிள்ளைகள் இருந்தார்கள் . அதனால் எனது மகளைத் தனியாக விடாமல் நானும் அவர்களுடன் அவர்களது வாகனத்தில் மாத்தளனை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது ஒரு பக்கம் கடற்கரை மற்றப் பக்கம் வயல்வெளி. அதில் என்னை இழுத்துக் கீழே விழுத்திவிட்டு சப்பாத்துக் காலால் என்னை உதைத்துவிட்டு மகளை அழைத்துச்சென்று விட்டார்கள்.

நான் அப்படியே தலைசுற்றி விழுந்து விட்டேன். நிமிர்ந்து பார்க்கும்போது அந்த வாகனம் மிகத் தூரமாகச் சென்றுவிட்டது. ஒரு குருவி அளவில் தான் எனக்கு அந்த வாகனம் தென்பட்டது . அந்த இடத்தில் குண்டு போட்டுக் கொண்டிருந்தார்கள். அத்துடன், எனது கணவர் நாங்கள் சென்ற இடத்தைத் தெரிந்துகொண்டு தேடி வந்தார்.

அவர் அங்கு வந்ததும் என்னைச் சந்தித்த பின்பு நான் அவரிடம் நடந்தவற்றைக் கூறி அழுதேன். அப்படியே அழுது அழுது அங்கேயே இருந்தோம். அங்கு இருக்கும் பொழுதுதான் ஐந்தாம் மாதம் பதினேழாம் திகதி எங்களிடம் வந்து உடனடியாக வாகனத்தில் ஏறச் சொல்லி அழைத்தார்கள். நான் வரமாட்டேன் எனக் கூறியபோது நமது பிள்ளைகளை மட்டு. வாய்க்காலுக்கப்பால் தான் கொண்டு சென்றுள்ளோம். நீங்கள் வாருங்கள் காட்டுகின்றோம் எனக் கூறினார்கள். அழைத்துச் சென்று வவுனியா, செட்டிக்குளம், இராமநாதன் முகாமில் விட்டார்கள். அதன் பின்னரும் எனது மகளைத் தேடிக்கொண்டுதான் இருந்தேன். 2009 டிசம்பர் மாதம் எங்களை மீண்டும் எமது இடத்தில் கொண்டுவந்து விட்டார்கள். விடும்போது எனது மகளைக் கேட்டு அவர்களிடம் அழுதேன். அழும் போது சில இராணுவ வீரர்கள், அவர்களுக்கு புனர்வாழ்வழிக்கப்பட்டு வருகிறது.அதன் பின்னர் வருவார்கள் எனக் கூறினார்கள்.

ஆனாலும் எனக்கு அதில் நம்பிக்கை இல்லாமல் நான் எனது மகளை அன்று தொடக்கம் தேடிக்கொண்டிருந்தேன். அப்போது 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தார். அப்பொழுது ஒரு பத்திரிகையில் எனது மகள் ஜனாதிபதிக்கு அருகில் பாடசாலைச் சீருடையுடன் இருக்கும் புகைப்படத்துடன் செய்தி வெளியாகியிருந்தது. அவள் உயிருடன் இருப்பதைப் பார்த்தேன். பார்த்து விட்ட பின்பு தான் நான் போராட்டத்தை ஆரம்பித்தேன். நான் அவரை நேரில் சந்தித்து கதைத்தபோது அவர் எனது மகளை விசாரித்து விட்டு என்னிடம் அழைத்துவந்து விடுவதாகக் கூறினார். 2017 ஆம் ஆண்டு அளவில் எனது வீட்டுக்கு எனது மகளை அடையாளம் காண்பதற்காக ஜனாதிபதி செயலகத்திலிருந்து இரண்டு பேர் வருகை தந்திருந்தார்கள். வருகை தந்தவர்கள் எனது மகளுக்கும் எங்கள் குடும்பத்துக்குமான அனைத்து தொடர்புகளும் உறவுகளும் பொருந்துகின்றன எனக் கூறிச் சென்றார்கள்.

அத்துடன், இரண்டு கிழமைகளில் எனது மகளை கொண்டுவந்து விடுவதாகக் கூறிச் சென்றார்கள். ஆனால், இன்றுவரை எனது மகளை நான் பார்க்கவில்லை. எனது மகள் உயிருடன் தான் இருக்கிறார். ஆனால், ஒரு சில கதைகள் மூலம் எனது மகள் உகண்டாவில் உள்ளார் என்றும் அவருடன் சேர்த்து 365 பேரை தாம் வைத்திருக்கிறார்கள் என்றும் சில தகவல்கள் நமக்கு கிடைத்துள்ளன. இன்று வரை நாங்கள் இந்தப் போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம் .எதுவிதமான பதிலும் கிடைப்பதாக இல்லை. எமது பயணம் காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை கண்டறிவது மட்டுமல்லாது, தமிழினத்தை எதிர்கால இனப்படுகொலைச் செயல்களிலிருந்து பாதுகாப்பதும் தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஆதரவைப் பெறுவதுமாகும் எனத் தெரிவித்தார்.

**காணாமல் ஆக்கப்பட்ட பல குழந்தைகளின் தலைவிதியை நாம் ஆழ்ந்த கவலையுடனும் வருத்தத்துடனும் பார்க்கின்றோம். போரில் பலியானவர்கள் என்பதற்குப் பதிலாக அவர்கள் மனித கடத்தலுக்கு பலியாகியிருக்கிறார்கள் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன.**

30,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இது இனப் போருக்கு முன்னும் பின்னும் நமது இனத்தைப் பாதித்த வேதனையான உண்மையாகும். நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தமிழ் இளைஞர்களுக்கு எதிரான ஆயுதமாகப் பிரயோகித்து எமது இனத்துக்கு அச்சத்தையும் துயரத்தையும் ஏற்படுத்துகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நீண்டகால இருப்பு அச்சத்தின் சூழலை நிலைநிறுத்தியுள்ளது. இது தமிழ் மக்களைத் திட்டமிட்டு இலக்கு வைக்கும் ஒடுக்குமுறைக் கருவியாகும்.

காணாமல் ஆக்கப்பட்ட பல குழந்தைகளின் தலைவிதியை நாம் ஆழ்ந்த கவலையுடனும் வருத்தத்துடனும் பார்க்கின்றோம். போரில் பலியானவர்கள் என்பதற்குப் பதிலாக அவர்கள் மனித கடத்தலுக்கு பலியாகியிருக்கிறார்கள் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ. பிளேக்கின் இரகசியத் தகவல்கள், குழந்தை கடத்தல் நடவடிக்கைகளில் பல அரசியல் கட்சிகளின் துணையுடனான இராணுவக் குழுக்களின் ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறது. இந்தக் குழந்தைகள் இலங்கை இராணுவப் படைகள் மற்றும் ஊழல் அதிகாரிகளின் உடந்தையுடன் அடிமைத்தனம், கட்டாய உழைப்பு மற்றும் விபசாரத்துக்கு விற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தக் குற்றங்களின் தீவிரத்தன்மையைக் கருத்திற்கொண்டு புகார்களை வழங்குவதைத் தாண்டி உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சில் மற்றும் பிற சர்வதேச அமைப்புகளை காணாமலாக்கப்பட்டோர் சங்கம் பலமுறை கேட்டும் வெறும் ஆவணப் பதிவுக்கான காலம் வெகு காலமாகிவிட்டது.

இந்தக் கொடூரமான குற்றங்களை விசாரித்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குழந்தைகளைக் கண்டறிவதற்குமான தீர்க்கமான நடவடிக்கைக்கான நேரம் இது. தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களுக்கு முடிவுகட்டவும் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை அவர்களது குடும்பங்களுடன் மீண்டும் இணைக்கவும் இலங்கை அரசின் அட்டூழியங்களுக்கு பொறுப்பேற்கவும் விரைவான மற்றும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

வன்முறைகள், அனர்த்தங்கள்,மனி தாபிமான நெருக்கடிகள் மற்றும் புலம்பெயர்வு போன்ற பல்வேறு காரணிகளால் தமது குடும்பத்தினரை, அன்புக்குரியவர்களை பிரிந்து தவிக்கின்றனர். 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உலகளாவிய ரீதியில் 2 இலட்சத்து 39 ஆயிரத்து 700 க்கும் மேற்பட்டோர் காணாமல்போயிருப்பதாக செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச்சங்கக் கூட்டிணைவில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இருப்பினும், இந்த எண்ணிக்கை காணாமல் ஆக்கப்படல்களின் உண்மை நிலைவரத்தையும் தீவிரத் தன்மையையும் துல்லியமாகப் புலப்படுத்தவில்லை. ஆகவே, இன்றைய நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டக்கார உறவுகள் என் அப்பா எப்ப வருவார்? என் காணாமல்போன பிள்ளை எங்கே? - என்று கேட்டுக்கேட்டே எம்மில் பலர் இவ்வுலகை விட்டே காணாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

கையிலே கொடுத்து விட்டு பதினைந்து வருடமாகக் கலங்கிய விழிகளும் உடைந்துபோன இதயத்துடன் இன்னும் உயிரோடு பிள்ளைகளுக்காய் - கணவனுக்காய் - அப்பாவுக்காய் என்று அலைந்து கொண்டிருக்கும் இவர்களுக்கு என்ன நீதியைகொடுத்து விட்டிருக்கிறது இந்த உலகம்.

உடைந்துபோய் மனம் முழுக்க ரணமாக மாற்றமுடியா அழுகையோடும் ஏக்கத்தோடும் அலைந்துகொண்டிருக்கும் எங்கள் குலப்பெண்களுக்கு என்ன விடை கிடைக்கும்? அவள் ஈரவிழிகள் காய்ந்துவிட, நெஞ்சு வெடித்து அழுவது மட்டுமே அவர்களிடம் உள்ள ஆற்றுப்படுத்தல். எத்தனை நாளைக்கென்று அவர்கள் இப்படியே புலம்பிப் புலம்பித் திரிவது? எங்கிருக்கிறானோ பிள்ளை எப்படி வரப்போகிறாரோ, மனுசன் என்னை வந்து பாப்பாரோ அப்பா என்றும் குழந்தை மனதாய் குமுறிக்கொண்டிருக்கும் உறவுகளின் வலிகளும் வேதனைகளும் தீராதா?

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## தெனியாயவில் சியபத பினான்ஸின் புதிய கிளை திறப்பு




இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி, சம்பத் வங்கி பிஎல்சியின் முழு உரிமம் பெற்ற நிறுவனமாக அதன் 52ஆவது கிளையை 310/2, பல்லேகம வீதி - தெனியாய பிரதான வீதியில் அண்மையில் திறந்து வைத்தது. இந்தக் கிளை திறப்பின் மூலம், சியபத பினான்ஸ் நாடு முழுவதுமுள்ள சமூகங்களுக்கு சிறந்த தரமான நிதி தீர்வுகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பைத் தொடர்கின்றது. உத்தியோகபூர்வ திறப்பு விழாவில் சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, பிரதம செயற்பாட்டு அதிகாரி ராஜீவ் டி சில்வா மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகள், உள்ளூராட்சி, தனியார் துறை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

புதிய தெனியாய கிளையானது குத்தகை, நிலையான வைப்புகள், சேமிப்புக் கணக்குகள், தங்க நிதியளித்தல், வணிகக் கடன்கள், தனிநபர் கடன்கள், துரித வரைவு சேவைகள், காரணியாக்கம் மற்றும் சியபத பினான்ஸின் புத்தாக்கமான Smart Pay தானியங்கு பட்டியல் செலுத்தும் வசதி உட்பட விரிவான நிதிச் சேவைகளை வழங்குகிறது. இந்தச் சேவைகள் பிராந்தியத்தில் தனிப்பட்ட மற்றும் வணிக அபிலாஷைகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலும் தெனியாயவின் தனித்துவமான மக்கள் தொகையின் பல்வேறு நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள தெனியாய, முதன்மையாக தேயிலை பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்ட வலுவான விவசாய முதுகெலும்புடன் பொருளாதார ரீதியாக வலுவான நகரமாகும்.

உழைக்கும் மக்களில் 46% விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் மற்றும் 29% தனியார் துறையில் வேலை செய்கிறார்கள். இந்த நகரம் ஏராளமான சிறு தேயிலைத் தோட்டம் வைத்திருப்பவர்கள் மற்றும் காய்கறிகள், நெல், மிளகு, இலவங்கப்பட்டை மற்றும் இறப்பர் உள்ளிட்ட பல்வேறு பயிர் அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு தாயகமாக உள்ளது. சுற்றியுள்ள சிங்கராஜா மலைக்காடுகள் - யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளம் - சுற்றுச்சூழல் சுற்றுலா பயணிகளை ஈர்க்கிறது. இது சமூகத்துக்கு மேலதிக வருமானத்தை வழங்குகிறது.

மேலதிக தகவலுக்கு சியபத பினான்ஸ் தெனியாய கிளையை 041-7605625 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது www.siyapatha.lk ஐ பார்வையிடவும்.

## குழந்தைகளின் எதிர்காலத்துக்கு வலுவான கல்வியே மிக சக்திவாய்ந்த முதலீடு



ஒரு வலுவான கல்வி அடித்தளமானது, நமது குழந்தைகளின் வளமான எதிர்காலத்துக்கு நாம் செய்யக்கூடிய மிக சக்திவாய்ந்த முதலீடுகளில் ஒன்றாகும். 2023 ஆம் ஆண்டில், 9,103 அரச பள்ளிகளில் 3.88 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் சேர்ந்ததாகவும் 1,37,869 க்கும் அதிகமானோர் தனியார் பாடசாலைகளில் படித்ததாகவும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையின் தரவுகள் தெரிவிக்கின்றன. 6 முதல் 18 வயதுக்குட்பட்ட இந்த இளம் மாணவ, மாணவிகள் நமது நாட்டின் எதிர்காலத்தின் வாக்குறுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். மேலும் அவர்களின் கல்விப் பயணத்தை ஆதரிப்பது பிரகாசமான மற்றும் வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமானது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்விச் செலவுகள் அதிகரித்து வருகின்றமை, ஆரம்பகால நிதித் திட்டமிடலை முக்கியமானதாக ஆக்குகிறது. உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள அனுமதி வாய்ப்புகளும் வெளிநாடுகளில் உயர்கல்வியைத் தொடரும் ஆர்வம் போன்றவை திட்டமிட்ட சேமிப்பின் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன. கல்விக் காப்பீடானது நிதிப் பாதுகாப்போடு சேமிப்பையும் இணைக்கும் ஒரு தீர்வை வழங்குகிறது. நிச்சயமற்ற காலங்களில் கூட பிள்ளைகளின் கல்வி தடையின்றியிருப்பதை இது உறுதி செய்கிறது.

தனிப்பட்ட உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நாட்டில் காப்பீட்டு நிறுவனங்கள் வழங்கும் பல்வேறு கல்விக் காப்பீட்டுத் திட்டங்களிலிருந்து பெற்றோர்கள் தமக்குத் தேவையான காப்பீட்டுத் திட்டத்தைத் தெரிவு செய்யலாம். இந்தக் கொள்கைகளில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி நிதிகள், முதலீட்டு வருமானம், பெற்றோரின் இறப்பு அல்லது இயலாமை காரணமாக பிரீமியத்தைத் தள்ளுபடி செய்தல் மற்றும் பெற்றோரின் மரணம் ஏற்பட்டால் நிதிச் சுமைகளைத் தளர்த்தும் அதேவேளை, பிள்ளைகள் கல்வியைத் தொடர்வதை உறுதி செய்தல் போன்ற அம்சங்களும் அடங்கும்.

## Curtin Universityயால் இலங்கையில் புதிய பல்கலைக்கழகம் அங்குரார்ப்பணம்



Curtin University Australia தனது புதிய உலகளாவிய பல்கலைக்கழக வளாகமான Curtin University Colombo ஐ கொழும்பில் நடைபெற்ற வைபவ நிகழ்வில் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தது.

புதிதாகத் திறக்கப்பட்ட Curtin University Colombo பல்கலைக்கழகத்துடன், Curtin ஐந்து சர்வதேச வளாகங்களைக் கொண்டதாக அமைந்திருப்பதுடன், உலகில் அதிக வளாகங்களைக் கொண்ட பல்கலைக்கழகமாக மாறியுள்ளது.

சிங்கப்பூர், மலேசியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மொரீசியஸ் ஆகிய நாடுகளில் Curtin இன் ஏற்கனவே நிறுவப்பட்ட வசதிகளை இது நிறைவு செய்கிறது. இந்தப் புதிய வளாகத்தினூடாக இந்து சமுத்திர வலயத்தில் (Ocean Rim) Curtin இன் உலகளாவிய வலையமைப்பு மேலும் பலமடையும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த உபவேந்தர் பேராசிரியர் ஹார்லின் ஹெய்ன், உலகளாவிய ரீதியில் உள்ள மாணவர்களுக்கு உயர்ந்த கற்றல் வாய்ப்புகளை வழங்குவதில் Curtin அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதற்குச் சான்றாக இந்தப் புதிய வளாகம் அமைந்துள்ளது - என்றார்.

“முழுமையான வசதிகளைக் கொண்ட வளாகத்துடன் இலங்கையில் மேற்கொண்டுள்ள பிரசன்னமானது இப்பிராந்தியம் தொடர்பில் நாம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்திருப்பதுடன், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (SLIIT) நீண்டகால, வெற்றிகரமான கூட்டாண்மையையும் இது கட்டியெழுப்பியுள்ளது” - என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாடநெறிகள் மற்றும் வசதிகள் குறித்த மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள curtin.edu.au இன் இணையதளத்துக்கு விஜயம் செய்யவும்.

## புதிய Mouthwash வகைகளை அறிமுகப்படுத்தும் க்லோகார்ட்

இலங்கையின் மிகவும் நம்பகமான வாய்ச்சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றான க்லோகார்ட், தனது புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட க்லோகார்ட் Mouthwash வகைகளை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது. Clove Mouthwash மற்றும் Mint Mouthwash ஆகிய இரண்டு வகைகளில் கிடைக்கும் இந்தப் புதிய தயாரிப்பானது, இலங்கை பாவனையாளர்களின் வாய்ச் சுகாதார நடைமுறைக்கு மேலும் அதிக பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது நாளாந்தம் வாய்ச்சுகாதாரப் பராமரிப்புப் பழக்கத்தில் மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி சிறந்த சுகாதார பலனைப் பெற உதவும்.

புதிய க்லோகார்ட் mouthwash ஆனது, புளோரைட்டைக் கொண்டுள்ளதோடு, சிறந்த வாய் ஆரோக்கியத்துக்கு உதவும் கிராம்பு மற்றும் புதினா போன்ற இயற்கைப் பொருட்களுடன் விசேடத்துவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கிராம்பு, புளோரைட் கலவையானது, பற் சொத்தை ஏற்படுவதைத் தடுக்க உதவுவதோடு, கிருமிகளை எதிர்த்துப் போராடுகிறது. அத்துடன், நீண்ட கால பாதுகாப்புக்காக பல் மிளிரியைப் பலப்படுத்துகிறது. புதினா பக்றீரியாவை எதிர்த்துப் போராடும் அதேவேளை, நீண்டநேர புத்துணர்ச்சியை வழங்குகிறது. ஒருவர் தினமும் க்லோகார்ட் மவுத்வாஷை வாய்ச்சுகாதார பராமரிப்புக்காக பயன்படுத்தும் வழக்கத்தில் கொள்வதன் மூலம், பற் சொத்தை மற்றும் ஈறு பிரச்சினைகள் போன்ற பல் பிரச்சினைகளின் அபாயத்தைத் குறைக்க முடியும் என்பதோடு, பொதுவான பல் பிரச்சினைகளுக்கு எதிராக மேலதிக பாதுகாப்பையும் பெற முடியும்.




## ஜூனியர் ஓபன் கோல்ஃப் சம்பியன்ஷிப் - 2024: 16ஆவது ஆண்டாக வலுவூட்டும் பிறீமா சன்ரைஸ்




இலங்கையின் முன்னணி போஷணை நிறுவனமான பிறீமா, தொடர்ச்சியாக 16ஆவது வருடமாக மிகவும் மதிப்புமிக்க கோல்ஃப் சம்பியன்ஷிப்பான ஸ்ரீ லங்கா ஜூனியர் ஓபன் தொடருக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது. இதன் மூலம் ஜூனியர் கோல்ஃப் தொடரின் மேம்பாட்டுக்கான தனது ஆதரவைத் தொடர்கிறது. இளம் திறமையாளர்களை வளர்ப்பதில் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பானது, இலங்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்து நட்சத்திரங்கள் பங்கேற்கும் 2024 இலங்கை ஜூனியர் ஓபன் கோல்ஃப் சம்பியன்ஷிப் தொடரிலும் மேலும் பெரிதாக வெளிப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பியன்ஷிப் தொடரானது டிசம்பர் 10 முதல் 12 வரை ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பில் (RCGC) நடைபெறவுள்ளது. பயிற்சி சுற்றுகளை டிசம்பர் 09ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தினமும் மு.ப. 8.00 மணிக்கு Tee-off இனை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

## ‘சுதந்திர சிந்தனைகள்’: ஜனசக்தி லைஃப் முன்னெடுக்கும் சிறுவர்களின் திறமைகளைப் போற்றும் கொண்டாட்டம்



நாடெங்கிலுமிருந்து இளம் சிறுவர்களின் கற்பனையை வெளிக்கொணரும் ஒரு புதுமையான முயற்சியான ‘சுதந்திர சிந்தனைகள்’ என்ற திட்டம் மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளமை குறித்து ஜனசக்தி லைஃப் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. விசேடமாக, 12,000 ஓவியங்கள் இதன் மூலமாகப் பெறப்பட்டதுடன், சிறுவர், சிறுமியரின் அசாதாரண படைப்பாற்றல் மற்றும் உற்சாகத்தை இந்நிகழ்வு காண்பித்துள்ள அதேசமயம், வளர்ந்துவரும் திறமைசாலிகள் பிரகாசிப்பதற்கு வலுவான தளமொன்றையும் வழங்கியுள்ளது. இளம் தலைமுறையினர் மத்தியிலிருந்து மாறுபட்ட குரல்களையும் மற்றும் ஓவிய வெளிப்பாடுகளையும் கொண்டாடுவதன் மூலமாக கலைகளை வளர்த்து, சமூகத்துக்கு வலுவூட்டுவதில் ஜனசக்தி லைஃப்பின் அர்ப்பணிப்பை ‘சுதந்திர சிந்தனைகள்’ அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

‘சுதந்திர சிந்தனைகள்’ நிகழ்வானது இருவேறு பிரிவுகளின் கீழ் நடத்தப்பட்டது. 3 முதல் 5 வயது கொண்ட சிறுவர்கள் ஒரு பிரிவாகவும் 6 முதல் 10 வயது கொண்ட சிறுவர்கள் இன்னொரு பிரிவாகவும் உள்ளடக்கப்பட்டனர். போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் தமது வயதையொத்தவர்களுடன் போட்டியிடுவதற்கான நியாயமான மற்றும் மகிழ்வான அனுபவத்தைக் கிடைக்கச் செய்வதற்காகவே இவ்வாறு இரு வேறு பிரிவுகளின் கீழ் அவர்கள் உள்ளடக்கப்பட்டனர்.

கிடைக்கப்பெற்ற ஓவியப்படைப்புகள் நியாயமான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு, முறையான தெரிவு நடைமுறை பின்பற்றப்படுவதை உறுதிசெய்வதற்காக புகழ்பெற்ற ஓவியர்களான கலாபதி கலாபூஷணம் புலஸ்தி எதிரிவீர, செல்வி பிரசாதனி குமாரி மற்றும் பிரகீத் ரத்நாயக்க உள்ளிட்ட மதிப்புக்குரிய நடுவர் குழு இதற்கான பணியை மேற்கொண்டிருந்தது.

## இலங்கையில் Ather 450X மின்சார ஸ்கூட்டரை அறிமுகப்படுத்திய Ather Energy

இந்தியாவின் முன்னணி மின்சார வாகன (EV) உற்பத்தியாளரான Ather Energy, அதன் Ather 450X மின்சார ஸ்கூட்டரை இலங்கையில் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது. இது நிறுவனத்தின் உலகளாவிய விரிவாக்கத்தில் முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.

இலங்கையில் Ather Energy இன் தேசிய விநியோகஸ்தராக செயற்படும் Atman Group மற்றும் Sino Lanka Private Limited ஆகியவற்றின் கூட்டு முயற்சியான Evolution Auto (Pvt) Ltd. மூலம் இந்த அறிமுகம் முன்னெடுக்கப்பட்டது.







சினமன் லைஃப் ஹோட்டலில் கடந்த 2024 நவம்பர் 29ஆம் திகதி இடம்பெற்ற இதன் அறிமுக நிகழ்வில், Ather Energy நிறுவனத்தின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். Ather Energy பிரதம வணிக அதிகாரி Ravneet Phokela மற்றும் விற்பனை, சேவை வழங்கல், உதவி வழங்கல் தலைவர் Gurinder Singh உள்ளிட்ட அந்நிறுவனத்தின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். Evolution Auto சார்பில் Sino Lanka (Pvt) Ltd. நிறுவனத்தின் தலைவர் Bob Kundanmal, Sino Lanka Private Limited பணிப்பாளர் Dhiren Kundanmal மற்றும் Atman குழுமத்தின் பணிப்பாளர்களான நாதன் சிவஞானநாதன், ரஞ்சித் லியோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Ather 450 ஆனது, அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளதோடு, இணையற்ற சவாரி அனுபவத்தை வழங்குகிறது. வலுவான மின்சார மோட்டார் மூலம் இயக்கப்படும் இந்த ஸ்கூட்டர், விரைவாக உயர் வேகத்தை அடைவதோடு, மணித்தியாலத்துக்கு 90 கி.மீ. வரையான வேகத்தை அடைகிறது. நிகழ்நேர பிரச்சினைகளை கண்டறிதல் மற்றும் வழிகாட்டல் அம்சங்களைக் கொண்ட ஆற்றல்மிக்க டேஷ்போர்ட், இருக்கைக்கு அடியிலான விரிவான சேமிப்பக பகுதியையும் மீளுருவாக்க பிரேக், 60 நிமிடங்களில் 80% சார்ஜ் செய்யக்கூடிய வேகமான சார்ஜிங் திறன் ஆகியன இதன் முக்கிய அம்சங்களாகும்.



# சிரியாவின் அடுத்த ஜனாதிபதி கிளர்ச்சிப்படைத் தளபதி அல்-ஜுலானி



## நாட்டைவிட்டுத் தப்பியோடிய அசாத் ரஷ்யாவில் தஞ்சம்



கிளர்ச்சி படை தளபதி அல்-ஜுலானி

சிரியாவை கிளர்ச்சிப் படை கைப்பற்றியுள்ள நிலையில், அந்நாட்டு அல்-அசாத்தின் 50 வருடகால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. இந்நிலையில், நாட்டைவிட்டுத் தப்பியோடிய அந்நாட்டு ஜனாதிபதி பஷர் அல்-அசாத் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அல்-அசாத்தின் சாம்ராச்சிய வீழ்ச்சிக்கு மூளையாகச் செயற்பட்ட கிளர்ச்சிக்குழுவின் தளபதி அல்-ஜுலானி சிரியாவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கக்கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, டமஸ்கஸைக் கைப்பற்றிய பின்னர் கிளர்ச்சிப் படைத் தளபதி அல்-ஜுலானி தனது முதல் உரையில், 'அல்அசாத்தின் வீழ்ச்சி பிராந்தியத்துக்கு புதிய வரலாற்றின் ஆரம்பம்'' எனத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் கடந்த 1971இல் இராணுவ மூத்த தளபதியாக இருந்த ஹபீஸ் அல்-அசாத் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார். 29 ஆண்டுகள் சிரியா ஜனாதிபதியாகவிருந்த அவர், 2000ஆம் ஆண்டு காலமானார். இதனையடுத்து அவரது மகன் பஷர் அல்-அசாத் கடந்த 2000 ஜூலை 17ஆம் திகதி ஜனாதிபதியானார். அவர் ஷியா பிரிவைச் சேர்ந்தவர் என்பதால், அவருக்கு எதிராக சுன்னி முஸ்லிம்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி அசாத்துக்கு ஈரான், ரஷ்யா ஆதரவளித்தன. கிளர்ச்சிப் படைகளுக்கு துருக்கி, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவளித்தன. கடந்த 2014இல் சுன்னி பிரிவைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதக் குழு சிரியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றியது. ஜனாதிபதி அசாத் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்குமிடையிலான போர் பல ஆண்டுகள் நீடித்தது. இதில் சுமார் 3 இலட்சம் பேர் உயிரிழந்தனர்.

பின்னர், ரஷ்யா, ஈரானின் ஆதரவால் ஜனாதிபதி அசாத்தின் கை ஓங்கி, ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் பிடியிலிருந்த பகுதிகள் மீட்கப்பட்டன. இந்தச் சூழலில் ரஷ்யா - உக்ரைன் போரைத் தொடர்ந்து, சிரியா ஜனாதிபதி அசாத்தின் இராணுவத்துக்கு ரஷ்யா, ஈரானின் ஆதரவு படிப்படியாகக் குறைந்தது.

இதற்கிடையே, சுன்னி பிரிவைச் சேர்ந்த ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (எச்டிஎஸ்) என்ற கிளர்ச்சிக் குழு வளர்ச்சியடைந்தது. அல்-கொய்தா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய இந்தக் கிளர்ச்சிக் குழுவுக்கு துருக்கி ஆதரவளித்தது. கடந்த நவம்பர் 27ஆம் திகதி சிரியா இராணுவத்துக்கு எதிராக மிகப் பெரிய போரை எச்டிஎஸ் கிளர்ச்சிப் படை தொடங்கியது.

இந்நிலையில், கடந்த முதலாம் திகதி சிரியாவின் அலெப்போ நகரைக் கைப்பற்றியது. அடுத்தடுத்து பல்வேறு நகரங்களைக் கைப்பற்றிய எச்டிஎஸ் படை வீரர்கள், நேற்றுமுன்தினம் (08) சிரியா தலைநகர் டமஸ்கஸை கைப்பற்றினர். மத்திய வங்கி, ஜனாதிபதி மாளிகை, அரசு அலுவலகங்களில் பணம், பொருட்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. பதற்றம் அதிகமான நிலையில், ஜனாதிதிபதி பஷர் அல்-அசாத் வெளிநாட்டுக்குத் தப்பியோடிவிட்டார்.

எச்டிஎஸ் கிளர்ச்சிக் குழு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,''அசாத் குடும்பத்தின் 50 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. சிறையிலிருந்த கிளர்ச்சிப் படை வீரர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரஷ்யாவில் தஞ்சம் புகுந்த அசாத்

சிரியாவிலிருந்து தப்பிய ஜனாதிபதி அல்-அசாத்துக்கு மனைவி, 2 மகன்கள், ஒரு மகள் உள்ளனர். அசாத்தின் மனைவி அஸ்மா, பிரித்தானிய தலைநகர் லண்டனைச் சேர்ந்தவர். சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்தபோது, மனைவி, பிள்ளைகள் ரஷ்யாவுக்குத் தப்பிச் சென்ற நிலையில், அசாத் மட்டும் தலைநகர் டமஸ்கஸில் இருந்தார். கடந்த 07ஆம் திகதி வரை அவர் அங்கிருந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அல்-அசாத் நேற்றுமுன்தினம் (08) நாட்டிலிருந்து தப்பிச் சென்ற விமான ரேடாரிலிருந்து மாயமன நிலையில், அவர் எங்கு சென்றார் என்ற தகவல் தெரியாதநிலை இருந்தது. இந்நிலையில், அவர் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே அஷாத்துக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மனிதாபிமான அடிப்படையில் ஆதரவு அளித்துள்ளதாக ரஷ்ய தரப்பு தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் வசிப்பிடமான க்ரெம்ளின் மாளிகை வட்டாரத் தகவலைச் சுட்டிக்காட்டி இத்தகவலை ரஷ்யாவின் இன்டர்ஃபேக்ஸ், டாஸ், ரியா நோவோஸ்டி பத்திரிகைகள் உறுதிப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளன.

### உலக நாடுகள் சொல்வதென்ன?

ஜனாதிபதி அசாத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்தமை குறித்து அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிக்கையில், அமெரிக்கா தனது பங்காளிகள் மற்றும் சிரியாவிலுள்ள பங்குதாரர்களுடன் இணைந்து உதவி செய்யும். பல ஆண்டுகளாக அசாத்துக்கு ஆதரவளித்து வந்த ஈரான், ஹிஸ்புல்லாஹ் மற்றும் ரஷ்யா கைவிட்டது. வளமான எதிர்காலத்தை சிரியா மக்கள் உருவாக்க இதுவே சரியான நேரம்.

சிரியாவில் அமைதி திரும்ப கூட்டாளிகளுடன் அமெரிக்கா பணியாற்றும். கடந்த நான்கு ஆண்டுகளில் எனது நிர்வாகம் சிரியா தொடர்பாக தெளிவான கொள்கையைப் பின்பற்றியது. ஜோர்தான், லெபனான், ஈராக் மற்றும் இஸ்ரேல் உள்ளிட்ட சிரியாவின் அண்டைநாடுகளுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் - என்றார்.

### சிரியாவின் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது

இது குறித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிக்கையில்,

அசாத்தின் சர்வாதிகார ஆட்சியின் வீழ்ச்சி, பல தசாப்த கால மிருகத்தனமான அடக்குமுறையை முடிவுக் கொண்டுவருகிறது. சிரியாவுக்கான புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. மக்களுக்கு துன்பம் இல்லாத சூழல் உருவாகியுள்ளது. சிரியாவில் நடக்கும் மாற்றத்தை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம் - என்றார்.

அல்-அசாத்தின் வீழ்ச்சிக்கு இஸ்ரேல்தான் காரணம் என்று ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. இதற்கிடையே அல்-அசாத்தின் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டதற்கு ஜேர்மனி, பலஸ்தீன், போலந்து உள்ளிட்ட நாடுகள் வரவேற்புத் தெரிவித்துள்ளன. ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டனியோ வரவேற்பு தெரிவித்துள்ளார். அனைத்து சிரியா குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முயலும் அதேநேரத்தில் வன்முறையைத் தவிர்க்குமாறு கிளர்ச்சியாளர்களுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சிரியா எல்லையிலுள்ள பகுதிகளைக் கைப்பற்ற இராணுவத்துக்கு நெதன்யாஹு உத்தரவு

சிரியாவில் பஷர் அல்-அசாத்தின் அரசை கிளர்ச்சியாளர்கள் அகற்றியதை வரலாற்றில் மிக முக்கியமான நாளாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு குறிப்பிட்டார்.

சிரியா எல்லையிலுள்ள இஸ்ரேல் கண்காணிப்பு மையத்துக்கு வந்த அவர், இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிசெய்ய, சிரியா எல்லையில் ஐ.நா. கண்காணிப்பிலுள்ள பகுதிகளைக் கைப்பற்ற இஸ்ரேலிய இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எல்லையில் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்த நெதன்யாஹு, சிரியாவுக்கு ஆதரவளித்த ஈரான் மற்றும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின் தொடர்ச்சியாக சிரியா அரசு அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சிரியாவின் அல்-அசாத்தின் சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்கு மூளையாக செயற்பட்ட கிளர்ச்சிக்குழுவின் தளபதி குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

### யார் இந்தக் கிளர்ச்சிப்படைத் தளபதி?

அந்தவகையில் சிரியாவைக் கைப்பற்றியுள்ள ஹயாத் தஹ்ரிர் அல்-ஷா(எச்டிஎஸ்) கிளர்ச்சிப் படையின் தலைவராக இருப்பவர் அபு முஹமது அல்-ஜுலானி (Abu Mohammed al-Julani). 42 வயதான இவர் சவூதி அரேபியாவின் ரியாத்தில் பிறந்தவர். இவரது குடும்பத்தினர் சிரியாவை பூர்வீகமாகக்கொண்டவர்கள். இவர்கள் வாழ்ந்த பகுதியை இஸ்ரேல் இராணுவம் ஆக்கிரமித்ததால், சவூதிக்கு இடம்பெயர்ந்தனர்.

கடந்த 2003இல் ஜுலானி மருத்துவக் கல்வி பயின்று வந்தபோது ஈராக்கை அமெரிக்க இராணுவம் ஆக்கிரமித்ததால், படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, அல்-கொய்தா அமைப்பில் இணைந்தார். ஈராக்கில் அமெரிக்க இராணுவத்துக்கு எதிராக போரிட்டார். கடந்த 2006இல் அமெரிக்க இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டார். 5 ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பின்னர் 2011இல் விடுதலையானதும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் இணைந்து, சிரியா ஜனாதிபதி அசாத்துக்கு எதிராகப் போரிட்டார்.

### சிரியாவின் அடுத்த ஜனாதிபதி அல்-ஜுலானி?

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் வீழ்ச்சிக்குப் பின்னர், ஜபாத் அல்-நஸ்ரா என்ற அமைப்பைத் தொடங்கினார். கடந்த 2017இல் எச்டிஎஸ் கிளர்ச்சிப் படையுடன் ஜபாத் அல்-நஸ்ரா இணைந்தது. இதன்பின்னர் எச்டிஎஸ் தலைவரானார். இந்த அமைப்பில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிரியாவின் புதிய ஜனாதிபதியாக அல்-ஜுலானி பதவியேற்கக்கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.



அல்-அசாத் நாட்டைவிட்டு வெளியேறிய நிலையில், கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்ட ஜனாதிபதி மாளிகை











வெற்றிக்களிப்பில் கிளர்ச்சிப் படையினர்; மகிழ்ச்சியில் பொதுமக்கள்....

# ஆட்களை துவைக்கும் இயந்திரம்




துணி துவைக்கும் இயந்திரம்போல, 15 நிமிடங்களில் மனிதர்களை சுத்தப்படுத்தக்கூடிய 'வொஷிங் மெஷினை' உருவாக்கி அசத்தியுள்ளது ஜப்பான் நிறுவனம்.

அந்த இயந்திரத்தில் ஏறி படுத்துக்கொண்டால் போதும் 15 நிமிடங்களில் ஆட்களை சுத்தப்படுத்திவிடும் இந்த இயந்திரம். ஜப்பானிய நிறுவனமான சயின்ஸ் கோ இதைக் கண்டுபிடித்து, அதற்கு 'மிரைய் நிங்கன் சென்டாகுக்' எனப் பெயரிட்டுள்ளது.

### தன்னாட்சி நாட்டுக்கு எதிராக தொடரும் அச்சுறுத்தல்

# தாய்வான் எல்லையை வட்டமிடும் சீனாவின் 14 போர்க்கப்பல்கள்



தாய்வான் எல்லையில் சீனாவின் 14 போர்க்கப்பல்கள் மற்றும் 7 விமானங்கள் சுற்றி வருவதால் தென்சீனக் கடற்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

சீனாவின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து பல்வேறு தீவுகளை உள்ளடக்கிய தாய்வான் தனி குடியரசு நாடாகப் பிரிந்தது. இதை ஏற்க மறுத்து தாய்வான் மீது சொந்தம் கொண்டாடும் சீனா, அதனை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சித்து வருகிறது. போர்க்கப்பல்கள், இராணுவ விமானங்களை தாய்வான் எல்லைக்கு அனுப்பி சீனா அச்சுறுத்தி வருகிறது.

இந்நிலையில், தாய்வான் பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில், "கடந்த சனிக்கிழமை காலை 6 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் தாய்வான் எல்லையில் சீனாவின் 14 போர்க்கப்பல்கள், 7 இராணுவ விமானங்கள் மற்றும் 4 பலூன்கள் சுற்றி வந்துள்ளன. இதில் ஏற்கனவே 8 போர்க்கப்பல்கள் இருந்த நிலையில் அது தற்போது 14ஆக அதிகரித்துள்ளது"- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏ.ஆர்.ரஹ்மான் அவுட்: சாய் அபியங்கர் இன்!



ஆர்ஜே பாலாஜி இயக்கும் 'சூர்யா 45' திரைப்படத்துக்குப் பிரபல பாடகர்கள் திப்பு, ஹரிணி தம்பதியின் மகனான சாய் அபியங்கரை இசையமைப்பாளராக படக்குழு அறிமுகம் செய்துள்ளது.

இந்தப் படத்துக்கு முதலில் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைப்பார் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், சாய் அபியங்கர் படத்தில் இணைந்துள்ளார். சாய் அபியங்கர் இசையமைத்த ''ஆச கூட பாடல்'' மற்றும் ''எண்ணமே ஏன் உன்னால / கட்சி சேர'' ஆகிய பாடல்கள் இவ்வருட ட்ரெண்டிங் பாடல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் தொடர்ந்த மழையுடனான காலநிலை: டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## கடந்த எட்டு நாட்களில் 858 நோயாளர்கள் பதிவு

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில், டிசம்பர் மாதம் ஆரம்பித்து முதல் வாரத்தில் 858 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் தொடர்ந்து பெய்த மழையுடனான காலநிலையும் இதற்கு காரணமென தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இவ்வருடம் ஆரம்பித்து இதுவரையான காலப்பகுதி வரை 46 ஆயிரத்து 385 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் தற்போது 19 ஆயிரத்து 927 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், 43 சதவீதமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதும் இம்மாகாணத்தி லேயேயாகும்.

மேலும், வடமாகாணத்தில் 5,089 நோயாளர் களும் மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் 4,344 நோயாளர்களும் மத்திய மாகாணத்தில் 4,974 நோயாளர்களில் கண்டி மாவட்டத்தில் 4,010 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

மேலும் சப்ரகமுவ மாகாணத்துக் குட்பட்ட கேகாலை மாவட்டத்தில் 1,721 பேரும் இரத்தினபுரி மாவட்டத்தில் 2,902 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடமேல் மாகாணத்தில் 2,961 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதாவது குருணாகல் மாவட்டத்தில் 1,761 பேரும் புத்தளம் மாவட்டத்தில் 1,200 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**Current Status of Dengue 2024** *As of 08.12.2024 midnight*

| Total | 46385 |
|---|---|
| 2024 | |
| December | 858 |
| November | 3178 |
| October | 2938 |
| September | 2769 |
| August | 3897 |
| July | 4506 |
| June | 3319 |
| May | 2647 |
| April | 2234 |
| March | 3615 |
| February | 6007 |
| January | 10417 |
| Dengue Deaths in 2024 | 23 |
| Case Fatality Rate | 0.05% |

| District | No of Cases | | Province | No of Cases | |
|---|---|---|---|---|---|
| Colombo | 11685 | (25.2%) | Western | 19927 | (43.0%) |
| Gampaha | 5732 | (12.3%) | | | |
| Kalutara | 2510 | (5.4%) | | | |
| Jaffna | 4344 | (9.4%) | Northern | 5089 | (11.0%) |
| Kandy | 4010 | (8.6%) | Central | 4974 | (10.7%) |
| Kurunegala | 1761 | (3.8%) | North Western | 2961 | (6.4%) |
| Puttalam | 1200 | (2.6%) | | | |
| Galle | 2112 | (4.6%) | Southern | 3607 | (7.8%) |
| Kegalle | 1721 | (3.7%) | Sabaragamuwa | 4623 | (10.0%) |
| Ratnapura | 2902 | (6.3%) | | | |

| | |
|---|---|
| High-risk MOH Areas [week 48, 2024] | 12 |
| Average Mid-night Total [Week 48, 2024] | 268 |

Source: NaDSys surveillance

இதேவேளை, தென் மாகாணத்தில் 3,607 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், காலி மாவட்டத்தில் 2,112 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 23 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை விமானப்படையின் 108 பேர் கொண்ட குழு

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் படையின் 108 பேர் கொண்ட குழு ஒன்று மத்திய ஆபிரிக்க குடியரசுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளது.

இலங்கை விமானப்படை ஹெலிகொப்டர் படையின் உறுப்பினர்கள் 2014ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளில் பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

இக்குழுவினர் ஹெலிகொப்டர் படைப்பிரிவின் போக்குவரத்து, வி.ஐ.பி. போக்குவரத்து, உணவு மற்றும் பானங்கள், உள்நாட்டு விமானங்கள், பரசூட் மூலம் பொருட்களை இறக்குதல், மருத்துவ குழு போக்குவரத்து உள்ளிட்ட பலவிதமான பணிகளுக்கு தீவிரமாக பங்களிப்பு வழங்கும்.

இதற்கிடையில், மத்திய ஆபிரிக்க குடியரசில் அமைதி காக்கும் பணிகளுக்காக அனுப்பப்பட்ட விமானப்படை ஹெலிகொப்டர் படைப்பிரிவைச் சேர்ந்த 92 விமானப்படை பணியாளர்களும் சமீபத்தில் மத்திய ஆபிரிக்காவில் இருந்து இலங்கை திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் மறைத்து வைக்கப்பட்ட கைத்துப்பாக்கி மீட்பு



வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீதோட்டமுல்ல பிரதேசத்தில் கொள்கலன் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் இரண்டு மகசீன்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி (MOH) அலுவலகத்துக்கு பின்னால் சேமித்து வைக்கப்பட்டிருந்த கொள்கலனொன்றில் இருந்தே கைத்துப்பாக்கி மீட்கப்பட்டதாக வெல்லம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்காக இந்த ஆயுதம் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.கைப்பற்றப்பட்ட துப்பாக்கி தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.மேலதிக விசாரணைகளுக்காக கைத்துப்பாக்கி மற்றும் மகசீன்கள் வெல்லம்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# கடற்றொழில், நீரியல் - கடல் வளங்கள் அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் புதிய செயலாளராக சட்டத்தரணி எம்.ஏ.எல்.எஸ். மந்திரிநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, சட்டத்தரணி எம்.ஏ.எல்.எஸ்.மந்திரிநாயக்கவுக்கு நேற்று (09) காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளித்தார்.



**கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலக செயலாளராக ஜே.எஸ்.அருள்ராஜ் நேற்று திங்கட்கிழமை (09) நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் அலுவலக்தில் வைத்து கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர வழங்கினர். (கனகராசா சரவணன்)**

# பாதாள உலக நபர் பொடி லஸ்ஸிக்கு பிணை




'பொடி லஸ்ஸி' என அழைக்கப்படும் பாதாள உலக நபரான ஜனித் மதுஷங்கவை பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பலப்பிட்டிய நீதிமன்றத்தில் சந்தேகநபர் நேற்று (09) காலை ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சில உயர் அதிகாரிகளுக்கு எதிராக பூஸா சிறைச்சாலையில் பகிரங்கமாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் வழக்கின் இரண்டாவது சந்தேக நபராக அவர் பெயரிடப்பட்டுள்ளார்.பொடி லஸ்ஸி இரண்டு வருடங்களுக்கும் மேலாக பல குற்றங்களுக்காக பூஸாவில் உள்ள உயர்பாதுகாப்பு சிறையில் விளக்கமறியலில் இருந்தார். மேலும் அவர் மீது பல நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹாட்லிக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் கலைச்செல்வனுக்கு பணி எழில் விழா



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் தம்பையா கலைச்செல்வனின் பணி எழில் விழா எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை, காலை 09 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் த.கலைச்செல்வனிடம் கற்ற மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கியற்றுறை சிரேஷ்ட பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

1994ஆம் ஆண்டு முதல் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய த.கலைச்செல்வன், 2021ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பொறுப்பேற்று, கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒருவராக மிளிர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

# கஜேந்திரகுமார் எம்.பியின் வாகனம் மோதி விபத்து - பெண்ணொருவர் பலி

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் (ACTC) பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வாகனம் புத்தளம், போலவத்தை சந்தியில் பாதசாரி கடவையில் பெண் ஒருவர் மீது மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் வாகனத்தினுள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கொழும்பில் இருந்து புத்தளம்-கொழும்பு வீதியூடாக யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனம் மோதியதில் காயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரின் வாகன சாரதி வென்னப்புவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# தென்னைகளில் தீவிரமாக பரவும் நோய்; தெங்குச் செய்கையாளர்கள் பாதிப்பு

புத்தளம் மாவட்டத்தில் தென்னைகளில் பரவும் ஒருவகையான நோய் காரணமாக தெங்குச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக தெங்குச் செய்கையாளர்கள் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வெள்ளை ஈ, சிவப்பு மற்றும் கறுப்பு வண்டுகள் காரணமாக தமது செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் தேங்காய் விலை நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்ற நிலையில், இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன்படி, புத்தளம் மாவட்டத்தில் 5,000 ஏக்கர் தெங்குச் செய்கை அழிவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெங்கு செய்கையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பாதாள உலக கும்பலைச் சேர்ந்த லலித் கன்னங்கர கைதானதாக வெளியான தகவல் உண்மையல்ல

## குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விளக்கம்

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல்காரரான லலித் கன்னங்கர கைதுசெய்யப்பட்டதாக வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானதென குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

லலித் கன்னங்கர என்பவர் டுபாயில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக அண்மைக்காலமாக சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

துபாயில் தலைமறைவாக உள்ள பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான லலித் கன்னங்கர டுபாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியான தகவல் போலியானது என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் டுபாய் பொலிஸாரிடம் கலந்துரையாடியதையடுத்து இந்த தகவல் பொய்யானது என தெரியவந்துள்ளது.

லலித் கன்னங்கர என்பவர் ஒரு வருடத்துக்கு முன்னர் டுபாயில் வைத்து அந்நாட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

# பாராளுமன்றத் தேர்தல் செலவு அறிக்கையை இதுவரை 1,239 வேட்பாளர்கள் கையளிக்கவில்லை



2024ஆம் ஆண்டு டிசம்பர் 06ஆம் திகதியுடன் முடிவடையும் காலக்கெடுவின்படி 2024 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளின் தொகுப்பை தேசிய தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, தேர்தலில் போட்டியிட்ட அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 8,361 வேட்பாளர்களிடமிருந்து மொத்தம் 7,412 வருமானம் மற்றும் செலவு அறிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதில் 949 பேர் இன்னும் தங்களது தேர்தல் செலவு தொடர்பான அறிக்கையை கையளிக்கவில்லை.

இதேவேளை, சுயேச்சை அரசியல் குழுக்களில் போட்டியிட்ட 690 வேட்பாளர்களிடமிருந்து 493 வருமானம் மற்றும் செலவு அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளதுடன், 197 பேர் இன்னும் அறிக்கையை ஒப்படைக்கவில்லை.

பெயரிடப்பட்ட 527 தேசியப்பட்டியல் உறுப்பினர்களில், 434 நபர்கள் மட்டுமே தங்கள் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை கையளித்துள்ளதுடன், 93 பேர் இன்னும் செலவு அறிக்கையை கையளிக்கவில்லை.

அதனடிப்படையில் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள், சுயேச்சை குழு வேட்பாளர்கள் மற்றும் தேசியப் பட்டியல் மூலமான வேட்பாளர்கள் என மொத்தமாக 1,239 பேர் தங்களது செலவு குறித்த அறிக்கையை இன்னும் கையளிக்கவில்லை என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# கடற்படையின் 74ஆவது ஆண்டு நிறைவு: 2138 கடற்படையினருக்கு பதவி உயர்வு






கடற்படையின் 74ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2,138 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.


கடற்படை தளபதி வைஸ் எட்மிரல் பிரியந்த பெரேராவின் பரிந்துரைகளுக்கமைய, பல்வேறு மட்டங்களில் கடமையாற்றும் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கடற்படையினர் 2,138 பேருக்கு நேற்று (09) பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடற்படை தளபதி வைஸ் எட்மிரல் பிரியந்த பெரேராவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் அனைத்து கடற்படை முகாம்களிலும் சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள், மத வழிபாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி ஆண்டு நிறைவுக்கான விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

# இலங்கைக்கான மலேஷிய உயர்ஸ்தானிகர் கிண்ணியாவுக்கு விஜயம்








**(சீனக்குடா செய்தியாளர்)**

இலங்கைக்கான மலேஷிய உயர்ஸ்தானிகர் எச்.இபத்லி ஹிஷாம் ஆதம் நேற்று (09) கிண்ணியாவுக்கு விஜயம் செய்தார்.

கிண்ணியா, அல்-மினா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட, அவசர தேவையுள்ள 122 மாணவர்களுக்கு இந்த உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டன.




# இந்தியாவை வீழ்த்தி அடுத்தடுத்து சம்பியன் பட்டம் வென்ற பங்களாதேஷ்




ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 11ஆவது இளையோர் ஆடவர் ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டியில் இந்தியாவை 59 ஓட்டங்களினால் வீழ்த்திய நடப்பு சம்பியன் பங்களாதேஷ் அடுத்தடுத்து இரண்டு சம்பியன் பட்டத்தை வென்று சாதித்தது.

டுபாய் சர்வதேச விளை யாட்டரங்கில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 49.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 198 ஓட்டங் களை மாத்திரம் குவித்தது. 199 என்ற இலகுவான ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 35.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று தோல்வி யடைந்தது. இதன் மூலம் பங்களாதேஷ் அணி 2023, 2024 தொடர்களில் சம்பியன் பட்டம் வென்று அசத்தியது. ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் ஆகிய இரண்டு விருதுகளையும் பங்களாதேஷ் பந்துவீச்சாளர் இக்பால் ஹொசெய்ன் எமொன் வென்றார்.

தொடரில் அதிக தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற அணியாக இந்தியா 1989, 2003, 2014, 2016, 2018, 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் (07 தடவைகள்) திகழ்கிறது. 2012ஆம் ஆண்டு நடைபெற்ற தொடர் இந்தியா – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பகிரப்பட்டது. 2017இல் ஆப்கானிஸ்தான் சம்பியனானது.

இந்த வருடம் 19 வயதுக்குட்பட்ட ஆசிய கிண்ண கிரிக் கெட் போட்டியில் சம்பி யனான பங்களாதேஷ் இளையோர் அணிக்கு இலங்கையின் நவீட் நவாஸ் பயிற்சியளித்து வருகின்றார். நான்கு வருடங்களுக்கு முன்னர் 19 வயதுக்குட்பட்ட ஆடவர் உலகக்கிண்ணத்தில் பங்களாதேஷ் சம்பியனான போதும் நவீட் நவாஸ் பயிற்று நராக இருந்தமை குறிப்பிடத்தக் கது.




## Mens Hockey Junior Asia Cup – 2024

# பாகிஸ்தானை வீழ்த்தி ஐந்தாவது முறையாக சம்பியன் பட்டம் வென்ற இந்தியா

**ஓமானில் நடைபெற்ற 10ஆவது இளையோர் ஆடவர் ஆசியக்கிண்ண ஹொக்கி தொடரில் நடப்பு சம்பியனான இந்தியா 5:3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை தக்கவைத்தது. வரலாற்றில் இந்தியாவுக்கு இது 5ஆவது சம்பியன் பட்டமாகும். இதற்கு முன் 2004, 2008, 2015, 2023 ஆகிய ஆண்டுகளில் இந்தியா சம்பியன் பட்டம் வென்றுள்ளது.**

**மேலும் இதன்மூலம், போட்டியில் அதிகமுறை சம்பியனான அணி யாக இந்தியா தொடர்கிறது. அடுத்தபடியாக பாகிஸ்தான் 03 முறை யும் தென்கொரியா, மலேஷியா தலா 01 முறையும் சம்பியனா கியுள்ளன. இந்தப் போட்டியில் வாகை சூடிய இந்தியா, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இளையோர் உலகக் கிண்ண ஹொக்கி தொடருக்கும் தகுதிபெற்றது. இந்தியாவுடன் 2ஆம் இடம் பிடித்த பாகிஸ்தான், 3ஆம் இடம்பிடித்த ஜப்பான் அணிகளும் உலகக்கிண்ண தொடருக்கு தகுதிபெற்றன. இந்த ஆசியக்கிண்ணத் தொடரில் தோல்வியே காணாத அணியாக இந்தியா சம்பியன் பட்டம் மற்றுமொரு சிறப் பம்சமாகும்.**




# ரூதர்போர்ட்டின் சதத்தின் உதவியுடன் பங்களாதேஷை வீழ்த்திய மே.இ. தீவுகள்

**பங்களாதேஷ் அணியுடனான 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 05 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டியது. பங்களாதேஷ் அணி மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணம் செய்து 02 டெஸ்ட், 03 ஒருநாள் மற்றும் 03 ரி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதலில் நடந்த டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் 1-1 என சமநிலை வகித்தன. இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி செயிண்ட் கிட்சில் நேற்று நடைபெற்றது.**

**முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 06 விக்கெட்டுக்கு 294 ரன்களை எடுத்தது. தன்ஜித் ஹசன் 60 ரன்கள், தலைவர் மெஹிதி ஹசன் 74 ரன்கள் அடித்தனர். 295 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 47.4 ஓவரில் 05 விக்கெட்டுக்கு 295 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன்மூலம் ஒருநாள் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. ரூதர்போர்ட் அதிரடியாக ஆடி 80 பந்தில் 08 சிக்ஸர், 07 பவுண்டரி உட்பட 113 ரன்கள் குவித்து வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று இலங்கை நேரப்படி இரவு 7.00 மணிக்கு ஆரம்பமா கிறது.**




# தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்டையும் கோட்டை விட்ட இலங்கை

*(அகீல் சிஹாப்)*

தென்னாபிரிக்க அணியுடனான முக்கியத்துவம் வாய்ந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் 109 ஓட்டங்களினால் தோல்வியை தழுவிய இலங்கை அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 0-2 என்ற அடிப்படையில் இழந்ததுடன், டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும் வாய்ப்பையும் பெருமளவில் இழந்துள்ளது.

முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 233 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டிய நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த வியாழக்கிழமை சென். ஜோர்ஜ் பார்க் மைதானத்தில் ஆரம்பமானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய தென்னாபிரிக்க அணி தங்களது முதல் இன்னிங்ஸில் 358 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிய இலங்கை அணி 328 ஓட்டங்களை குவித்தது. அதன்படி, 30 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்க அணி 317 ஓட்டங்களைச் சேர்த்தது.

அதன்படி, இலங்கை அணியின் வெற்றியிலக்காக 348 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. குறித்த இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இலங்கை அணி 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 05 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்களை குவித்திருந்தது.

143 ஓட்டங்களை பெறவேண்டிய நிலையில் ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி 35 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 109 ஓட்டங்களினால் தோல்வியை தழுவியது. இந்த தோல்வியில் இலங்கையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி வாய்ப்பு குன்றியது.

இலங்கை அணிக்கு அடுத்து நடைபெறவுள்ள ஆஸி. அணியுடனான இரு டெஸ்ட் போட்டி களை வென்றா லும், ஏனைய அணிகளின் வெற்றி, தோல்விகள் கவனத்தில் கொள் ளப்பட வேண் டிய நிலை உருவாகி யுள்ளது.




# விளையாட்டுத் துளிகள்

★ நியூஸிலாந்து அணியுடனான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 323 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டி, தொடரில் இன்னுமொரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. இந்நிலையில் 3ஆவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் சனிக்கிழமை (14) ஹமில்டனில் ஆரம்பமாகவுள்ளது.

★ இங்கிலாந்தின் புதிய வேகப்பந்துவீச்சாளர் கஸ் அட்கின்சன் நியூஸிலாந்தின் கடைசி 03 வீரர்களை அடுத்தடுத்த பந்துகளில் வீழ்த்தி ஹெட்ரிக் சாதனை புரிந்தார். கிட்டத்தட்ட 07 ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு இங்கிலாந்து பந்துவீச்சாளர் ஹெட்ரிக் சாதனை படைத்தார்.

LANKA T10 SUPER LEAGUE
இன்னும் 1 நாள்
டிசம்பர் 11 முதல் 19 வரை கண்டியில்

# தலைவராக மோசமான சாதனை பட்டியலில் இணைந்த ரோஹித்




ஆஸி. அணியுடனான 2ஆவது டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்ததன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகமுறை தொடர் தோல்விகளை சந்தித்த இந்திய தலைவர் என்ற மோசமான பட்டியலில் ரோஹித் சர்மா இடம்பிடித்தார்.

1967 - 68 ஆண்டுகளின் இந்திய அணியில் தலைவராக இருந்த மேக் படவுடி தொடர்ந்து 06 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியை தழுவி இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். 1999ஆம் ஆண்டில் தொடர்ந்து 05 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியை தழுவி சச்சின் டெண்டுல்கர் இப்பட்டியலில் 2ஆம் இடத்தை பிடித்துள்ளார்.

தொடர்ந்து 04 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியை தழுவி தத்தா கெய்க்வாட் (1959), எம்.எஸ்.தோனி (2011) (2014), விராட் கோஹ்லி (2020-21) ஆகியோரை சமன் செய்து ரோஹித் சர்மா (2024) இப்பட்டியலில் 3ஆம் இடத்தை பகிர்ந்துள்ளார்.

# பதவி விலகிய டுமினி

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வெள்ளைப்பந்து அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளரான ஜே.பி. டுமினி குறித்த பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தற்போது சொந்த மண்ணில் இலங்கைக்கு எதிரான 02 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இந்த தொடர் நிறைவடைந்ததும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 03 ரி20, 03 ஒருநாள் மற்றும் 02 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடவுள்ளது.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி அளிக்கும் விதமாக அந்த அணியின் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டின் (ஒருநாள், ரி20) துடுப்பாட்ட பயிற்சியாளராக செயற்பட்டு வந்த முன்னாள் வீரர் ஜே.பி.டுமினி அந்தப்பதவியில் இருந்து விலகி உள்ளதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது, தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உடனான பரஸ்பர ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, ஜே.பி. டுமினி வெள்ளைப்பந்து துடுப்பாட்ட பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து உடனடியாக விலகியுள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7